காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

18—6—72

★

உள்ளே......

இந்திய துணைக்கண்ட விடுதலையும் அறிஞர் அண்ணாவும்
(சிறப்புக் கட்டுரை)

★

மாநில சுயாட்சி ஆபத்தானது ?

★

நகைச்சுவை நாடகம்!
(நிறைவுக் கட்டுரை)

★

இதயத்தில் ஓர் ஓவியம்!
(சிறுகதை)

விலை 25 காசு

நட்போடு வாருங்கள்!

(கவிஞர். கருமலைத் தமிழாழன்)

நம்மண்ணன் காட்டிட்ட
  நல்வழியைப் பின்தொடர்ந்து
இம்மாநி லந்தன்னை
  இயக்குகின்ற கழகத்தின்;
பல்வேறு வாரியங்கள்
  படைத்துதமிழ் மக்களுக்கு
பல்வளங்கள் கொழித்திடவே
  பணியாற்றும் கழகத்தின்

சிறப்பான மாநாடு
  சிந்தைகொளும் மாநாடு
திருவான மாநாடு
  தித்திக்கும் மாநாடு
வருகின்ற பதினேழாம்
  பதினெட்டாம் நாட்களிலே
தருமபுரி மாநகரில்
  நடைபெறவே போகிறது!

வாய்ப்பேச்சில் போகாமல்
  வடிப்பெல்லாம் செயலினிலே
வாய்ப்பாகக் காட்டுகின்ற
  வான்புகழும் அமைச்சர்கள்;
சட்டமன்றந் தன்னில்தம்
  மக்கள்குறை எடுத்துரைத்து
திட்டங்கள் ஆற்றுகின்ற
  திறமையான உறுப்பினர்கள்;

கழகத்தைத் தூண்களாகக்
  காக்கின்ற பேச்சாளர்
வழக்கமாகப் பல்லோரும்
  வருகின்றார் இந்நகர்க்கு!
நாடகமும் கழகத்தின்
  சாதனைக்கண் காட்சிகளும்
வாடாத மலராக
  மணம்பரப்பப் போகிறது!

தமிழினத்தீர்! தமிழுக்காய
  தம்முயிரைத் தந்திட்ட
தமிழர்தம் மாநாடு
  தவறாமல் வாருங்கள்!
சுற்றத்தார் புடைசூழ
  சுறுசுறுப்பாய் வாருங்கள்!
நற்புதுமை நாட்டிடவே
  நட்போடு வாருங்கள்!

நகைச்சுவை நாடகம் - சபாபதி - திறனாய்வு

(புலவர். தி. நா. அறிவுஒளி)

முன்னுரை

உரைநடை நாடகங்களுக்கு மக்களிடையே ஒரு மதிப்பை உண்டாக்கி வளர்த்தவர்களுள் முதலில் கருதத் தக்கவர் பம்மல் சம்மந்த முதலியார் ஆவார். அவருடைய பல நாடகங்கள் மேடையில் வெற்றியோடு நிகழ்ந்தன. மனோகரா, இரண்டு நண்பர்கள், வேதாள உலகம், லீலாவதி சுலோசனா, கள்வர் தலைவன், இரத்தினாவளி, மாளவிகாக்கினி மித்திரம், சபாபதி முதலிய தொண்ணூறுக்கும் மேற்பட்ட நாடகங்களை இயற்றி, மேடையில் அரங்கேற்றிய நாடகாசிரியர் பம்மல் சம்பந்தர் ஆவர். இவர் ஆங்கிலத்து சேக்சுபியரின் நாடகங்களையும், வடமொழிக் காளிதாசரின் நாடகங்களையும் தழுவித் தமிழில் நாடகங்கள் இயற்றியுள்ளார். சுகுணவிலாச சபை என்னும் பயில்முறை நாடகமன்றம் அமைத்துத் தொழில் நோக்கமின்றிக் கலை நோக்கோடு நாடகத் தொண்டாற்றியவர் இவர். இவரே சிறந்த நடிகராக விளங்கியவர்.

இவரது மொத்த நாடகங்களையும் ஒரு குறித்த கண்ணோட்டத்தில் ஆராய்வதானால், தனி நூல் எழுத நேரிடும். ஆசிரியன் படைப்புகளை ஆராய்வது எளிய பணியன்று. இங்கே அவரது 'சபாபதி' என்னும் நகைச்சுவை நாடகத்தின் சில இயல்புகளை மட்டுமே திறனாய முற்படுகிறேன்.

பல நாடகங்களை ஒரு நாடகாசிரியர் படைத்தாலும் ஏதேனும் ஒரு நாடகத்திலே தான் தனது ஆளுமையை நாடகாசிரியர் புலப்படுத்துவார். அவ்வகையில் பம்மல் சம்பந்தரின் பல நாடகங்களுள் 'சபாபதி'யில் அவரது ஆளுமை புலப்படுத்தப்படுவது உய்த்துணரத் தக்கதாகும்.

பண்போவிய உருவாக்கம் ஒருவகையில் வெற்றியுடன் இந் நாடகத்தில் அமைந்துள்ளது. வாழ்வையளாவிய பண்போவியமாக உருவாக்கப்படாமல், நிகழ்ச்சிகள் சிலவற்றின் அடிப்படையில் அமைத்த பண்போவியப் படைப்புக்களே சபாபதியில் காணப்படுகிறது.

உலகை எள்ளி நகையாடும் முறையில் தம்மையும் எள்ளிநகையாடிக்கொள்கிறார் நாடகாசிரியர் எனக் கருதுவதும் 'சபாபதி'யைப் பொருத்த அளவில் பிழையாகாது.

ஆசிரியரின் 'மொழிநடை' பேச்சுவழக்கையே முழுதும் தழுவியது; இலக்கியநயம் குறைந்தது; ஆனால் மக்களிடம் செல்வாக்கு பெற்றது.

'சபாபதி'யை ஓரளவு நாம் இனிக் காண்போம் :

*பம்மல் சம்பந்தரின் சபாபதி - திறனாய்வு

தமிழில் தோன்றிய பழைய நாடகங்கள், புதிய நாடகங்களில் பம்மல் சம்பந்தரின் 'சபாபதி' ஒரு தனி இடமும் தகுதியும் சான்றது. எள்ளல் நாடகம் (Farce) என்ற துறையில் முதல் படைப்பு இதுவே.

இடைக்காலத் தமிழகத்தில் ஓரளவு நடுநிலைச் செல்வக்குடியில் இரண்டுங் கெட்ட மனநிலையுடையார் போக்கை எள்ளியும் நகையாடியும் விளக்குகிறது எனலாம். இந்நாடகத்தில் இரட்டைக் கதைத் தலைவர்கள் ஒரே பெயரினராய் அமைந்து இரட்டையராக இணைந்தே பயில்வது ஒரு புது உத்தி என்பதை இவண் குறிக்க வேண்டும்.

1. சபாபதி முதலியார்—கதைத் தலைவன்.
2. சபாபதி—கதைத் தலைவன் பணியாள்.

---

*எனக்குக் கிடைத்த நூல் 1944-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டதாம். அந்நூல் முன்னுரையில்,

"This is a Farce of modern life. Herein is the first part, there are four more parts to this: I venture to think that Sabapathy has become a household name among my friends who have known me and my writings.

இவ்விருவரையே சுற்றிப் பின்னிப் படர்ந்து நாடகம் வளர்கிறது. *ஏனைய உறுப்பினர்கள் தொகையல் போலத் துணையாகின்றனர்.

இந்நாடகத்தில் கதையைவிட உரையாடலே உயிர்நிலையாக விளங்குகிறது. உரையாடலினூலேயே ஒப்பற்ற நகைச்சுவையை உண்டாக்கும் பேராற்ற லில் நாடகாசிரியர் தலைசிறந்து விளங்குகிறார்.

நம் நாட்டு இடைக்கால அடிமை வாழ்க்கை முறைகளை எள்ளி நகையாடிச் சீர்திருத்த வேண்டு மென்ற விழைவே ஆசிரியர் சம்பந்தரை இந்நாடகம் எழுதத் தூண்டியிருக்கும் என்று கருதத் தோன்று கிறது.

அரை குறைப்படிப் பாளியர் மக்கள் மன்றத் தில் தம் போலிப் பெருமிதத்தை எவ்வாறு நிலை நாட்டினர் என்பதையும், கல்லா மாந்தரை அவர்கள் எவ்வாறு ஆட்டி எள்ளினர் என்பதையும், கல்லார் எத்தகு வெகுளி மனப்பாள்மையராய்க், காவற்று வாழ்ந்தனர் என்பதையும், ஆங்கிலப்பித்தும், பிறரை விரட்டிட வேண்டுமென்ற விழைவும் எவ்வளவில் மனஆழத்தில் ஊறியிருந்தது என்பதையும், மேலோட்டமாக எல்லாச் செய்திகளையும் நம் மக்கள் எடுத்துக்கொண்டு ஏமாறும் நெறி எத்தகையது என்பதையும் இந்நாடகத்தின் நிகழ்ச்சி, உரையாடல் —குறிப்பு முதலியவற்ருல் ஆசிரியர் யாருடைய மனமும் புண்படாத முறையில் எடுத்துக் காட்டும் திறன் ஒப்பற்றது!

முதற் காட்சி:

சபாபதி (முதற் பகுதி) நாடகத்தின் முதற் காட்சியிலேயே தலைமக்களை — சபாபதி முதலியார் (ச. மு.), சபாபதி (பணியாள்)—அறிமுகம் செய்கிருர். சபாபதி முதலியார் பேசுகிருர்;

"பை ஜோவ்! (By Jove) நாலேகால் மணியாயி போச்சி, இன்னம் ஓர்த்தரும் வரலே. இந்த இண்டியன்சு (Indians)களுக்கு பங்க்சுயாலிடி (Punctuality) இன்ரதே தெரியரதில்லெ; யுரோ பியன்ஸா (Europeans) யிருந்தா, நாலரை மணியின்னு, நாலு மணிக்கெல்லாம் சரியா வந்தூட மாட்டாங்களா!"

—இந்தத் தொடரிலேயே நம் நாட்டாரின் குறையொன்றை எள்ளி நகையாடுகிருர் ஆசிரியர்.

இவன் தன் கதைத் தலைவனை முட்டாளாகவும், அதே போதில் நுண்ணறிவுள்ளவனுகவும் - இருவேறு பண்போவியமாகப் படைத்திருக்கிருர்! இத்தகு முரண்பாடுடைய தன்மையை ஒரு கதை மாந்தருக் கமைத்து வெற்றி பெறுவது எளிதன்று.

சபாபதியின் நண்பர் வருகிருர். சபாபதியை நோக்கி, "என்னு பிரதர் நேத்துமத்யானம் என்னமா யிருந்துது?" என்று கேட்கிருர். ச. மு: "காபி (Coffee) எல்லாம் நன்னுயிருந்துது, அந்த உப்புமாவுலேதான் கொஞ்சம் உப்பு அதிகமா போட்டுட்டான் கு, அதெல்லா பிரதர். அரித் மெடிக் (Arith Metic) பேபரெபத்தி கேட்டேன்.

ச. மு; அதுவா க்வைட் ஈசி (Quite Easy), ஒன்பது சம்ஸ் கரெக்ட் (Sumes Correct)

கு: எட்டு சம்ஸ்தானே கொடுத்திருந்துது.

ச. மு: ஓ!—அது சொல்ரைங்களோ—அதுவே—ஒரு சம்முக்கு ரெண்டு ஆன்சர் (Onsuer) வந்துது பாருங்கோ, அத்தெ சேத்து ஒன்பது கணக்கு பண்ணி வுட்டேன்."

மாணுக்கர் தேர்வு—கல்வி—என்பதைப் பொறுப் போடு கருதுவதில்லை என்பதையும், உணவுச் சுவை, விளையாட்டுச் சுவை, பொழுதுபோக்குச் சுவைகளிலே

Of there scenes printed herein, any one may be acted by itself for an evening party, if so desired.

I would invite the attention of all concerned to the fact that a royalty has to be paid and my previous permission obtained before staging this or any other play of mine.

Pammal Lodge,
Madras,
24th August, 1944.

of the Author.

என்றெழுதியுள்ளார் ஆசிரியர். அக்காலத்தில் பெரும்பாலான நூல்களுக்கு முன்னுரை ஆங்கிலத்தி லேயே அமைந்திருக்கும். அம்மரபை இவரும் தழுவியுள்ளார்.

*சபாபதி (முதற் பகுதி)யில் வரும் கதையுறுப்பினர் ;

1. மாணிக்க முதலியார்—சபாபதி முதலியார்தந்தை, 2. சபாபதி முதலியார்—மாணிக்க முதலியார் மகன் (கதைத் தலைவன் I) 3. குப்புசாமி முதலியார்—சபாபதி முதலியார் மாமனுர் ; 4. கிருட்டிண சாமி—சபாபதி முதலியார் மைத்துனன், 5. முருகேசம், 6. குமரகுரு, 7, நரசிம்மாசாரி — மூவரும் சபாபதி முதலியாரின் நண்பர்கள், 8. சுந்தரமூர்த்திப்பிள்ளை—ஓர் பெரிய மனிதன், சபாபதி—சபாபதி முதலியாரின் வேலையாள் (கதைத் தலைவன் II) 9. சின்னசாமி முதலியார்—தமிழாசிரியர். 10. நாகேசுவர ஐயர், 11. கோபிநாத் ராவ், 12. கோவிந்தப்பிள்ளை — மூவரும் பாடகர்; 13. திரிபுரம்மாள் — சபாபதி முதலியார் தாயார், 14. தெய்வயானை அம்மாள்—சபாபதி முதலியாரின் மாமியார்.

கதை நிகழிடம் : சென்னை திருவல்லிக்கேணி.

சம்பந்தர் தன் நூல்களைத் தம் தாய்—தந்தையருக்கும், நண்பர்க்கும் நினைவுக் குறி காணிக்கை யாக்குவது வழக்கம்: சபாபதி முதற் பதிப்பில்,

"Inscribed to the beloved Memory of my Parents P. Vijayaranga Mudaliar and P. Manickavelu Ammal and My Friend C. Rangavadivelu." என்றெழுதியுள்ளார்.

பேரீடுபாடுடையவராக உள்ளனர் என்பதையும் நுட்பமாகச் சுட்டி நகையாடுகிருர்.

எட்டு கணக்கு விஞக்கள் தாளில் கொடுக்கப் பட்டிருக்க, ஒன்பது கணக்குகளேப் பிழையில்லாமல் செய்ததாகக் கூறும் ச. மு. நம்மை மிகவும் நகைக்கச் செய்கிருன்!

ச. மு. தன் பணியாள் ச. வை பாக்குத் தூள் கொண்டுவரச் சொல்கிருன். அவன் கையில் கொஞ் சம் பாக்குத்தூளேக் கொண்டு வருகிருன். அப்போது, ச. மு., "உன் அழுக்குக் கையால் கொண்டு வரக் கூடாது. எதைக் கொண்டுவரச் சொன்னுலும் ஒரு தட்டில் கொண்டுவர வேண்டும்" என்கிருன்.

ச. மு. பந்தாடுவதற்காக (Tennis Shoes) கொண்டுவரச் சொல்கிருன். உடவே 'ச! ஒரு வெள்ளித் தட்டில் பந்தாடும் செருப்பை வைத்துக் கொண்டு வருகிருன். அதற்காகச் சினக்கிற ச. மு. ('Stupid goose!') என்று ஏசுகிருன். ச. அந்த ஆங்கி லச் சொல்லுக்குப் பொருள் என்னவென்று கேட்கி ருன். ச. மு. 'ரொம்ப கெட்டிக்காரன்' — என்று பொருள் என்று கூறுகிருன்.

சற்று சென்று ச. மு. வின் நண்பனேயே ('Stupid Goose') என்று சபாபதி 'பாராட்டி' விடுகிருன்! ச. மு. வுக்கும் அவன் நண்பர்களுக்கும், கடுஞ்சினம் பொங்குகிறது. நமக்கோ நகைப்பு பொங்குகிறது!

ஆங்கிலந் தெரியாதவரை, ஒரளவே ஆங்கிலங் கற்ருேர் எவ்வளவு ஏமாற்றி இழிவு செய்து வந்தனர் என்பதை இதனினும் வலிமையாகச் சுட்டிக் காட் டிட இயலுமா என்பதை எண்ணுமின்!

விளேயாட இயலாதபடி மழைவந்து விடுகிறது. அதனுல் சீட்டாட்டம் ஆட நண்பர்கள் கருதுகின்ற னர். ச. மு. 'கார்டுஸ் கொண்டாட" என்கிருன் ச, அஞ்சலட்டை ((Cord) கொண்டுவந்து நீட்டுகிருன். அதனுல் ஏச்சுப் பேச்சைப் பரிசாகப் பெறுகிருன். ச. மு. 'கார்டு பாக்' (Cord Pack) கொண்டு வா' என்று கூறுகிருன். ச. 'கார்பெட் பாக் (Carpet Bag) கொண்டு வருகிருன்! மீண்டும் வைகிருன்!

இந்நிலேயில் ச. 'கார்டு பாக்குக்கு தமிழ்ச் சொல் என்ன என்று தெரிந்துகொள்ள விரும்புகிருன் ;—

ச : "நீ சும்மா கோவிச்சிக்காதெ அப்பா—இந்த இங்கிலீஷ் பாஷெ எனக்கு நண்ணு அர்த்தமா வலெ—தமுழலே சொல்லப்பா—

ச. மு. :- கார்டுபாக்குக்கு தமிழ் என்னு பிரதர்?

ச, :- என்னுப்பா, அது தெரியாதா ஒனக்கு? என்ன முட்டாளா இருக்கிறேப்பா!

ச. மு. :- அடே ஸ்டுபிட் கூஸ் பேசாதிரு!

மு. :- காயிதக் கட்டு இண்ணு சொல்லுங்க பிரதர்.

ச. :- ஆ! அவருக்குத் தெரியும்பா, அவர் கெட்டிக் காரப்பா! டுபிட்கூஸ் அவரு!

ச. மு. ;- என்னடா அவரை திட்ரையெ? கழுதை!

ச.:- நான் எங்கேப்பா திட்டினேன்? கெட்டிக்கார ருண்ணல்லவோ சொன்னேன்? டு பிட் கூஸ் இன்னு, ரொம்ப கெட்டிக்காரன் இண்ணு நீதானே அப்பா சொன்னே.

—இப்பகுதியில் தமிழ் செம்மையாகத் தெரியாமை யும் மடமையே என்பதை மறைமுகமாகத் தெளிவாக்கிவிடு கிருர் நாடகாசிரியர்!

சீட்டாட ஒரு ஆள் குறைவாக இருந்தமையால், ச, மு. தெருவில் யாரையேனும் தெரிந்தோரை அழைத்துவரச் சொன்னுன். ச. சென்று, ச. மு. வின் தமிழாசிரியரான சின்னசாமியாரை அழைத்துவந்து விடுகிருன்! 'அப்பேன், என்னே என்னத்திற்குக் கூப்பிட்டே?" என்று வினவுகிருர். ச. மு. திண்டாடு கிருன். திடுமென அவன் மூளே சுறுசுறுப்படைகிறது. ஒரு பாட்டுக்குப் பொருள் தெரியவில்லே என்று கூறு கிருன். திருவாசகத்தில் வரும் "நாடகத்தால் உன் னடியார் யோல்" என்ற பாட்டைக் காட்டுகிருன். ஆசிரியர் பொருள் கூறும் அழகு இது:—

சி. :- ரொம்ப சுலபமாச்சே — சொல்ரேன் கேள்— நாடகத்தால் — நாடகத்தால், உன்னடியார்— உன்னடியார், போல்—போல, நான்—நானுகப் பட்டவன், அடித்து — அடித்து, வீடகத்தே— வீடகத்தே, புகுந்திடுவான் — புகுந்திடுபவன், மிகப் பெரிதும்—ரொம்ப பெரிதாகவும், விரை கின்றேன் — விரைக்கின்றேன். ஆடகச் சீர்— ஆடகமாகிய சீர், மணிக் குன்றே—மணியாகிய குன்றே, இடையரா — இடையராகிய அன்பு னக்கு — அன்புனக்கு. (பின்புறமாக மாணிக்க முதலியார் மெல்ல வந்து நிற்கிருர்) என்னுட கத்தே—என் வூட்டினுடைய அகத்தே. நின் றுருக—நின்றுருக, தந்தருளேன்—தந்தருளேன், உடையானே—உடையவனே —அவ்வளவுதான் அர்த்தம், ரொம்ப சுலபமாச்சே! [தொடரும்

அறிஞர் அண்ணாவின் கொள்கைகளில் வளர்ச்சிப் போக்குகள்:

இந்தியத் துணைக்கண்ட விடுதலையும் அறிஞர் அண்ணாவும்

(அருணா இராசகோபால், எம்.ஏசி. (வேளாண்))

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

இந்தியாவில் குடியேற்ற ஆட்சியும் விடுதலை முழக்கமும்:

இந்தியாவின் மணப் பொருட்களுக்காகவும், பருத்திப் பொருட்களுக்காகவும் கடல் வழி கண்ட ஐரோப்பிய இனங்களில் பிரித்தானியர் சூழ்ச்சியால் இந்தியாவை வென்றடக்கியது உண்மை என்ற ஒரு பக்க உண்மையைக் காணும்போது, இந்தியாவின் சமுதாய அமைப்பு ஆதிக்கத்திற்கு வாகானதாக இருந்த மறுபக்கப் பேருண்மையை ஒப்புக்கொண்டாக வேண்டும். இந்தியா அடிமைப்பட்டது உலகத்தின் வியப்பல்ல; இயற்கையானது; இயக்க இயல் வழி நிகழ்ந்ததாகும். "இந்து என்றும் முஸ்லிம் என்றும் பிளவுபட்டதோடு குலத்துக்குக் குலம், சாதிக்குச் சாதி வேறுபட்டிருந்த ஒரு தேசம்; ஒருவரையொருவர் வெறுத்து ஒதுக்கித் ;தனித்தனியே வாழ்வதாலேயே ஒருவகைச் சமநிலை எய்திய ஒரு சமுதாயம்; இத்தகைய தேசமும் சமுதாயம் ஆக்கிரமிப்புக்கு ஏற்ற இரையன்றோ?" (மார்க்ஸ், 1853).

இந்தியாவின் முதல் விடுதலைப் போர் என்று (வலிந்து) பெயரிடப்பட்ட சிப்பாய்க்கலகம் நடந்து முடிந்ததும் விக்டோரியா பேரரசியிடம் இந்திய மத நம்பிக்கையாளர்கள் பெற்ற உறுதிமொழி: இந்திய, சமுதாய, மதக் கொள்கைகளில் பிரித்தானிய ஆட்சி தலையிடக் கூடாதென்பதாகும். இதனால் இந்தியம் பெறவேண்டிய நலன்களைப் பெற இயலவில்லை. இந்திய இயங்கா (Static) தேக்க (Stagnated) சமுதாயம் வெள்ளை ஆதிக்கத்தால் உடைபட்டிருந்தால் அது இயங்கியும், செயல்பட்டும், வளர்ந்தும், மாற்றம் பெற்றிருக்கும். ஆனால் இந்தியர் எழுச்சி என்ற பெயரால் எழுந்த ஆற்றல்கள் வாய்ப்பளிக்கவில்லை. இதே தேவையினை மார்க்ஸும் (1853) உணர்ந்து எடுத்துரைக்கின்றார். "இந்தியாவில் இங்கிலாந்து இருவகையான பணியை நிறைவேற்ற வேண்டும்; ஒன்று அழித்தல்; மற்றொன்று புத்துயிரளித்தல்; அதாவது, பழைய ஆசிய சமூகத்தை அழிக்க வேண்டும்; ஆசியாவில் மேலைய சமுதாயத்தின் பௌதிக அடிப்படைகளை நிறுவ வேண்டும்." இந்திய சமுதாயம்—ஆசிய சமுதாயங்களில் ஆசிய சமுதாயம், எந்த காரணங்களுக்கு அடிமைபட்டதோ அந்த காரணங்கள் முதல் இந்திய விடுதலைப் போர் காலத்திலும், இறுதி விடுதலைப் போர் காலத்திலும் மாறாமல் நீடித்த நிலை குறிப்பிடத்தக்கது.

சிறப்புக் கட்டுரை!

குடியேற்ற ஆட்சி வெளியேற்றப்பட வேண்டியதும், ஒரு நாட்டு மக்கள் தங்களைத் தாங்களே ஆள உரிமை பெறுவதும் இயல்பான—நேர்மையான உணர்வாகும். ஆனால் இந்திய விடுதலைக்குப் பின்னர் வெள்ளையர் ஆட்சியை விட இந்து ஆட்சி (இந்திய மேல்தட்டு மக்கள் ஆட்சி) பல மடங்கு கொடிய ஆட்சியாக இருக்குமென பலர் நம்பினார்கள். அவர்களில் காலஞ் சென்ற வின்சென்ட் சர்ச்சில் ஒருவர். இந்திய பூபாகம் மதம், சாதி, மற்றும் பிளவுக்காரணிகளில் பிளவுண்டிருப்பதால் இந்தியா விடுதலைக்கு ஏற்ற பகுதியல்ல எனக் கருதினார்.

இந்திய நாட்டில் 2000 ஆண்டுகள் அடிமைபட்டு, கொடுமைபட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவராக விளங்கிய பர். அம்பேத்கார் அவர்களும் இதே கருத்தினைக் கொண்டிருந்தார் 'இந்திய விடுதலைப் போராளர்கள் 180 ஆண்டுகள் ஆளும் வெள்ளையரிடம் விடுதலை கேட்கின்றனர். ஆனால் 2000 ஆண்டுகள் அடிமைப்படுத்தும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எப்பொழுது விடுதலை வழங்கப் போகின்றனர்?" என்று கேட்ட கேள்வி இதுவரை விடையில்லா கேள்வியாகவே உள்ளது. 'இந்தியா விடுதலை பெற்றால் அதனால் வரும் அதிகாரம் எல்லோராலும் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் (தனஞ்சாய் கீர், 1964) என்ற முழக்கத்தால் இந்தியாவில் சாதி பேதங்கள் ஒழிந்து ஒரு மானுடச் சமுதாயம் விடுதலையின் முன் தேவைகள் என்பதைச் சுட்டிக் காட்டினார் அம்பேத்கார்.

தென்னகத்தில் பிராமணர் அல்லாதார் உரிமைக்குப் போர்க்குரல் எழுப்பிய நீதிக்கட்சியும் தன்னாட்சியை (Homerule) விரும்பாமல், சமுதாய சீர்திருத்தத்தையும், பிளவுண்ட சமூகங்கள் (சாதிகள்) இடையே சமநிலை எய்தவேண்டும் என நம்பியது. நீதிக் கட்சியின் பேராளர்களாக (Delegates) இங்கிலாந்து சென்ற குழுவின் தலைவர் பர். மாதவன் (நாயர்) இயற்கை எய்தியதால் குழுவின் அடுத்த உறுப்பினர் ரெட்டி நாயுடு (1919) இங்கிலாந்து பாராளு மன்ற குழுவின் முன் "பெரும்பாலான மக்களுக்கு அறிவு, ஆற்றல், படிப்பு இல்லாத இந்த அவல நிலையில், தன்னாட்சியோ, விடுதலையோ ஆட்டுக்குட்டியை ஓநாயிடம் ஒப்படைப்பதற்குச் சமமாகும்" என்று வாதிட்டார். இந்திய சமுதாயத்தின் கடுமையான ஏற்றத் தாழ்வும் எதிர்காலத்தில் நம்பிக்கை இல்லாமையும்தான் இங்ஙனம் பேசவைத்தன் என்பது உண்மையாகும். கல்வி, ஆட்சி மன்றங்கள் ஆகியவற்றில் போதிய பிரதிநிதித்துவம் பெருமை—பெற இயலாமை ஆகியனவும் இந்த இயக்கத்தின் (நீதிக்

கட்சி) அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டன (அண்ட்ரி பெட்டிலி, 1969). அரசு பதவிகளில் வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் அளிக்கக் கோரி வெற்றி பெற்றதும் இந்த இயக்கம்தான். இந்த நீதிக் கட்சியின் வழிவந்தவர்தான் அறிஞர் அண்ணா.

அறிஞர் அண்ணா முழுநிறை சமுதாய சீர்திருத்தக்காரர். பழைய வேதாந்த — இந்து (என சொல்லப்படும்) சமுதாயம் மாண்டு, மறைந்து, பூண்டற்று போகவேண்டும்; அதன் மாள்வு, மறைவு ஆகியவற்றிற்குப் பின்னர் புதிய சமுதாயம் உருவாக வேண்டும் என எண்ணினார். புதிய சமுதாயம் உருவாகினால் ஒழிய விடுதலையால் பயனில்லை என்ற நம்பிக்கை கொண்டிருந்தார். இந்திய நாட்டு விடுதலைக்குப் போராடிய இந்தியப் பேராயக் கட்சி (காங்கிரசு) இந்தியாவின் சமுதாய—மத அமைப்புகளுக்கும் அரசியலுக்கும் தொடர்பில்லை என்ற விந்தையான கருத்து கொண்டிருந்தது. இந்தியப் பேராட்சியில் (காங்கிரசுக் கட்சியில்) இருந்த சமூக சீர்திருத்தக் காங்கிரஸ் கட்சி அரசியல் சீர்திருத்தக் கட்சியோடு மோதி, மாநாடு நடத்தவும் இயலாமல் மறைந்தொழிந்தது. 1862-ல் டபுள்யூ. சி. பாணர்சி அரசியல் சீர்திருத்தத்தை வலியுறுத்தி, அதற்கு சமூக சீர்திருத்தம் தேவையில்லை என்று அழுத்தமாகக் குறிப்பிட்டார் (அம்பேத்கார் 1936). சாதி - மத - இயங்காதேக்க சமுதாயத்திற்கு அரசியல் விடுதலை கோரும் ஒரு மாபேரியகத்தின் இத்தகு தலைமைக்குரல் சீர்திருத்தக்காரர்களைத் தொலைவில் நிறுத்துவதில் வியப்பில்லை. 'விடுதலைக்குப் பின்னர் சமுதாய சீர்திருத்தம்' என்பது ஒரு முனைப்பாயினும் இந்திய சமுதாயத்தில் வலிவற்ற முனைப்பு என்பதையே வரலாறு துலக்கமுற விளக்குகின்றது.

காலப்போக்கிலும் இந்தியபேராயக் கட்சி (Indian National Congreas) இதே கொள்கையால் இந்திய மேல் தட்டு மக்களின் விடுதலைக்காகவே முனைந்ததாகவே அண்ணாவும்-அவர் சார்ந்த இயக்கத்தினரும் நம்பினர். "இந்திய விடுதலை இயக்கத்தில் மேல் சாதி மக்கள் இடம் பெற்றனர். ஏனெனில் இந்திய கீழ்ச்சாதி மக்கள் ஆங்கிலேய அரசை எதிர்பார்த்தனர்" என்று பண்பாட்டு மானிடவியலார் சீனிவாஸ் (1964) குறிப்பிடுவதைச் சிந்திப்பது நலமாகும். காந்தியடிகள் விடுதலை இயக்கத்தை பொதுமக்கள் இயக்கமாக்க முனைந்தும் அது உயர் வகுப்பார் இயக்கமாகவே நின்றது (குனர்மிர்டால், 1967). இதே கருத்தையே செயபிரகாட்ச் நாராயணன் (1958) அவர்களும் வெளியிட்டுள்ளார். இந்தியப் பேராயக் கட்சி (காங்கிரசு) சமுதாய நோக்கத்தைத் தொடக்க காலத்தில் இணைத்துகொள்ளாமல் போனதே இதற்குக் காரணம். தென்கிழக்கு ஆசியாவின் பேரியக்கமாக விளங்கி மக்களாட்சி அமைப்பை (Democratic Institution) வளர்த்த இயக்கமாகவும், விடுதலை பெற்ற விழுமிய இயக்கமாகவும் இருந்தும் தனது நாட்டு வளர்ச்சி, நிகரமை (Socialism) ஆகிய கோட்பாடுகளை எய்தாமல் போனதற்கும் இதுவே காரணியமாகும்.

அறிஞர் அண்ணா, காந்தியடிகளை இந்து மத வாதியாகவும், சனாதன வாதியாகவும், வருணாசிரமத்தை ஆதரிப்பவராகவும் கண்டார். இதனை அண்ணா எழுதியுள்ளார் "காந்தியார் ...ஓர் வர்ணாசிரம பித்தர், இந்து மத பக்தர், சாத்திர வெறியர், வைதிகப் பிரியர், கற்பனைக் கிறுக்கர், மனிதாபிமான எதிரி, தொழிலாளர் துரோகி, சமதர்ம சத்ரு, பார்ப்பன தாசர், முதலாளித் தரகர், ஏகாதிபத்ய ஏவலர், தீண்டாதாரின் பகைவர், ஏழைகளின் வைரி, பெண் சுதந்திர விரோதி". (அண்ணா-பரதன், 1942). அண்ணா இளமை காலத்தில் கருத்து மாறுபாட்டால் காந்தியடிகளைத் தாக்கினார். இந்த வேகமான தாக்குதல் அவரின் உள்ளத்தில் பொங்கி வழிந்த சமுதாயச் சீர்திருத்தத் தீக்குழம்பின் சிதறல்களாகும். இந்தியப் பேராயக் கட்சியும்—காந்தியடிகளும் "விடுதலை முன்னர்! மற்றவை பின்னர்!" என்பதற்கு எதிராக "சீர்திருத்தம் முன்னர்! விடுதலை பின்னர்!" என்றகொள்கையில் எழுதினார் அண்ணா (அவர் சார்ந்த இயக்கத்தின் சார்பில்).

காந்தியடிகளை, அண்ணா இந்து மத பக்தர் என்று சாடியபோது தான் ஒரு இந்து அல்ல என்று நம்பினார். இக்கட்டுரையின் முற்பகுதியில் இந்து சமுதாயத்தைப் பற்றிக் குறிப்பிட்ட மதிப்பீட்டையே அண்ணாவும் கொண்டிருந்தார் என்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. இந்து மதத்திற்கு அடிப்படை எனப்படும் நான்கு வேதங்களையும், மனுஃச் (ஸ்)மிருதியையும், ஆகம உபநிடங்களையும், புராண இதிகாசங்களையும், தேவார, திருவாசக நாலாயிர பிரபந்தங்களையும் கடுமையாக விமர்சித்தார் — அவற்றின்மீது தாக்குதல் தொடுத்தார். (அண்ணா—நக்கீரன், 1942).

அண்ணா அவர்கள் காந்தியடிகள் பற்றி பெண்ணுரிமை தொடர்பாகக் கொண்டிருந்த கருத்தைப் போன்றே பாரதியாரும் கொண்டிருந்தார். "ஹிந்து தேசத்து விதவைகளின் வாழ்க்கை நரக வாழ்க்கையிலும் கொடியதாய் எண்ணற்ற துன்பங்களுக்கு இடமாகிறது. பால்ய விதவைகள் புனர் விவாகம் செய்து கொள்ளலாமென்று ஸ்ரீமான் காந்தி சொல்லுகிறார். ஆனால் அதைக் கூட உறுதியாகச் சொல்ல அவருக்குத் தைரியமில்லை" (யாரோ, 1962).

தீண்டாமையைப் பொறுத்த அளவு காந்தியடிகள், தீண்டாமையை வெறுத்தாரே தவிர சாதி ஒழிய வேண்டுமென சொல்லவில்லை. பிரித்தானிய அரசை இசைய வைத்துப் பெற்ற தாழ்த்தப்பட்டவர்களுக்கான தனித் தொகுதி முறையைத் தனது

குறிக்கோளும் - கேலிக்கூத்தும்

நாட்டிலே ஒற்றுமை வேண்டும். இது குறிக்கோள்—அனைவரும் ஏற்கத் தக்கது. இதன் வெற்றிக்காக அரும்பணியாற்றுவது மாணவர் கடன். "நாட்டின் ஒற்றுமைக்காக உன் மொழி, உன் மரபு அழிந்திடவும் ஒருப்படவும் வேண்டும்; பிற மொழியின் ஆதிக்கத்தை ஒப்புக் கொள்ள வேண்டும்!" — இஃது அறிவுள்ள எவரும் ஏற்க முடியாதது. நாட்டுப் பொதுச் செல்வம் நாளும் வளர வேண்டும். அதற்கான முறையில் அனைவரும் உழைத்திட வேண்டும். இஃது எல்லோரும் ஒப்புக்கொள்ளத் தக்க இலட்சியம். நாட்டுச் செல்வம் பெருகட்டும்; அது நாலாறு பேர்களிடம் சென்று சிக்கிக்கிடப்பினும் கவலைவேண்டாம் என்றுரைப்பது லட்சியமாகாது—அதனைக் கேலிக்கூத்து ஆக்குவதாகும்.

— அறிஞர் அண்ணா.

ஒண்ணா நோன்பு மூலமும், பூனா உப்பந்தம் மூலமும் செயலற்றதாக்கிய நிலை இந்திய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விளைந்த தீமையாகத் தாழ்த்தப்பட்ட மக்களும், அவர்களின் தலைவர் பர். அம்பேத்காரும் கருதினர் — கருதி வருகின்றனர். இந்து மதம் என்பதை ஒரு அலகு (Unit) என காந்தியடிகள் நம்பினார். இந்த நோக்கிலும் அண்ணா வேறுபட்டார்.

இந்திய நாட்டு மேல் தட்டு மக்களும், தொழில் முனைவர்களும் காந்தியடிகள் பின்னால் நின்றது அண்ணாவை உறுத்தியது. அறிஞர். அண்ணா சார்ந்திருந்த நீதிக் கட்சியிலும் மிட்டா மிராசுகளும், பெருந்தனக்காரர்களும் இருந்தனர். ஆனால் அண்ணா தனது சேலம் மாநாட்டு தீர்மானம் அப்பெரு முதலைகளை விலக்கி, தான் சார்ந்திருந்த இயக்கத்தை ஏழைகளின் இயக்கமாக்கினார். (மறைமலையான் 1969).

மேலே சொல்லப்பட்ட காரணங்களால், இந்தியப் பேராயக் கட்சியும், காந்தியடிகளும், அண்ணாவால் அச்சத்தோடு நோக்கப்பட்டது—நோக்கப்பட்டார். அத்தகு எண்ணத்தின் தாயாக இருந்தது; அண்ணாவின் சீர்திருத்தத் தாகமும், புரட்சிக்கருத்துகளும், தேங்கி மக்கிவிட்ட இந்து மத கோட்பாடுகளின்பால் வெறுப்பும், பேதமற்ற சமுதாயத்தில் ஆழ்ந்த பற்றுமேயாகும்.

கால ஓட்டத்தில் அண்ணா சார்ந்திருந்த நீதிக் கட்சியும் நாட்டு விடுதலையை விரும்பியது. நீதிக் கட்சி 1927-ல் முழு மாநில தன்னாட்சி உரிமை கோரியது. பின்னர் 1938-ல் பெரியார் அக்கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், அதுகாறும் "குடியேற்ற நாட்டு நிலை" (Dominion Status) -யை வற்புறுத்தி வந்த தன் அடிப்படைக் கொள்கையை மாற்றி முழு தன்னாட்சி (Full Independence) கோரியது. நீதிக்கட்சியின் இம்மாற்றத்திற்குக் காரணம்; இந்திய விடுதலைக்கு நாட்டு மக்கள் (பேராயக் கட்சிப் பின்னணியில்) நல்கிய பேராதரவின் பாதிப்பாகவும் இருக்கக்கூடும்.

அறிஞர் அண்ணாவே இதுபற்றி விளக்கம் தந்திருக்கின்றார். "அன்றைய நீதிக்கட்சிக்கு இரண்டு மகத்தான பொறுப்புகள் இருந்தன. மக்களின் விருப்பத்தை ஈடேற்றும் வகையில் செயல்பட வேண்டிய பொறுப்பு ஒன்று; இன்னொன்று ஆங்கிலேயரின் அதிகாரத்துடன் மோதிக் கொள்ளாமல் பெறவேண்டியவைகளைப்பெறுவது என்பது ... காங்கிரசுத் தலைவர்களான மோதிலால் நேரு, சி. ஆர். தாசு, கோகலே போன்றவர்கள் தொடக்கத்தில் வெள்ளையர்களோடு இணங்கிப் போய் ஆட்சிப் பொறுப்பில் பங்கு பெறுவது தவறன்று என்று வாதிட்டனர்". இந்த வாதத்தின் மூலம் அண்ணாவின் நிலையை உணரமுடியும்.

அண்ணாவின் உள்ளத்தில் கனன்ற பகுத்தறிவு ஆர்வம், விடுதலை ஆர்வத்தையும் சேர்த்துக் கொண்டதைப் பார்க்கின்றோம். *1941*-ல் பேராயக் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்து விலகியதும், இரண்டாம் கட்சியாகிய நீதிக் கட்சி அமைச்சரவை அமைக்க அழைக்கப்பட்ட நேரத்தில் "நீதிக் கட்சிக்காரர்களாகிய நாம், கவர்னர் அழைப்பை ஏற்றுக்கொள்ளக் கூடாது" என்ற தீர்மானம் கொணர்ந்து வெற்றி பெற்றார்.

சேலம் மாநாட்டில் தன் கட்சிக்காரர்கள் வெள்ளையர்கள் அளித்த பட்டங்களைத் துறக்க வேண்டுமென்று தீர்மானம் கொணர்ந்தார். மற்றொரு புகழ்மிக்க தீர்மானம்; பெயருக்குப் பின்னால் சாதிப் பெயரைப் போடக்கூடாதென்பதாகும்.

இந்திய நாடு விடுதலை பெற்ற நாளில் தன் தலைவரின் கருத்திற்கு எதிராக 'விடுதலை நாள் இன்ப நாள்' என்றே ஏற்றுக்கொண்டார். "நாங்கள் காங்கிரசை எதிர்க்கிறதாலேயே சுயராச்சியத்துக்கு விரோதிகள் அல்ல" எனக் குறிப்பிட்டார் அண்ணா (மறைமலையான், *1969*).

காந்தியடிகளும், அண்ணாவும் இருவேறு பாதைகள் வழி நடந்தவர்கள்—கொள்கைகள் மாறுபட்டவர்கள். இருவரின் கொள்கைகளும் இறுதியில் சந்தித்திருக்க வாய்ப்புகள் இருந்ததாகவும் நம்பலாம். காந்தியடிகள் தன் இறுதி காலத்தில் பகுத்தறிவு வாதியாக—நாத்திகராக மாற வாய்ப்புகள் இருந்ததாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுவதைச் சிந்திப்பது நலமாகும். கொடுமை (இந்து மதக் கொடுமை) காந்தியடிகள் உயிரைப் பறித்ததால் இயலாமல் போய்விட்டது.

இறுதிவாய் :

அறிஞர். அண்ணா அவர்கள் இந்திய சமுதாயத்தின் அதன் கூறான தமிழ்ச் சமுதாயத்தின் இயக்க இயலை (Dialatics) உணர்ந்திருந்தார். இந்திய சமுதாயம் வேத - மனு நீதி வழி உருவான வருணாசிரம, சாதி, மானுட நெறியற்ற, இயங்கா-தேக்க - சாதி சமுதாயம் என்பதை உணர்ந்து சமுதாயத்தில் இயக்கமும், வளர்ச்சியும், மானுட நெறியும் இருக்கவேண்டுமென்று எண்ணினார். எனவே மானுட உரிமைகள் நாட்டு விடுதலையை விட மேம்பட்டதாக அவருக்குத் தோன்றியது. வெள்ளைய ஏகாதிபத்தியத்தைவிட எந்த அளவிலும் குறையாத இந்திய சமுதாய ஆதிக்கம் - மனிதனை மனிதன் அழிக்கும் கொடுமை முதலில் உடைக்கப்பட வேண்டும் என நம்பினார்.

அறிஞர். அண்ணா விடுதலைக் கோரிக்கையைத் தள்ளிப் போட்ட இயக்கத்தில் இருந்தாரே தவிர, அவர் விடுதலை வேண்டாமென சொல்லவில்லை. இந்திய சமுதாய அமைப்பின் கொடுமையை இனங்காண முடியாமல், அதை ஒரு ஆன்மீகச் சமுதாயம் என்று காந்தியடிகளும், அரசியலுக்கும் சமுதாயத்துக்கும் சம்பந்தமில்லை என்று பேராயக் கட்சியும் (காங்கிரசுக்) எண்ணம் கொண்டிருந்ததால், அந்நிலையில் நாட்டு விடுதலை சமுதாய (அடிப்படை) சீர்திருத்தத்தை விரும்பாதவர்கள் கையை வலிவுபடுத்தும் என்று எண்ணுவது வியப்பல்ல. காந்தியடிகள் இந்து மதத்தவராக இருந்ததும் (பிற்காலத்தில் நாத்திகராக மாறவும் வாய்ப்பிருந்ததும் உண்மை) அண்ணாவின் உள்ளத்தில் சந்தேகத்தை உருவாக்கியது. அறிஞர். அண்ணா அவர்கள் விரும்பியது;

சாதியற்ற - பேதமற்ற - சுரண்டலற்ற - பகுத்தறிவு சார்ந்த முழு விடுதலை.

எனவேதான் அண்ணா விடுதலையை விரும்பாதவர் போலவும்—பிற்காலத்தில் அதை வரவேற்றவராகவும் முரண்கள் கொண்டவர் போலவும் மேல்வாரியான கண்ணோட்டத்தில் தெரிவார்; அவை முரண்பாடுகளன்று சமுதாயத்தின் கூர்தவறத்தில் (பரிணாமத்தில் - (Social evolution) காணப்படும் மாறுபட்ட தோற்றங்கள் மட்டுமேயாகும். *

மாநில சுயாட்சி ஆபத்தானது?

"மாநில சுயாட்சி பற்றி தி.மு. கழகம்—சொல்லும் விவாதம் எனக்குப் புரியவில்லை"

"மாநில சுயாட்சி"-என்ற வார்த்தையே ஆபத்தானது.

—இவைகள் இரண்டும் இந்த நாட்டுப் பிரதமரால் மதுரையில் உதிர்க்கப்பட்ட இரு வேறு கருத்துக்கள்.

மாநில சுயாட்சி பற்றி அவருக்குப் புரியவில்லை — ஆனல் அது ஆபத்தானது என்பது மட்டும் புரிகிறதாம்.

புரிகின்ற இலக்கணத்தின் முழுப் பொருள் நமக்குப் புரியவில்லை.

மாநில சுயாட்சி புரியவில்லை—என்று நிறுத்தியிருந்தால் — புரிய வைக்க—சரியானவர்களை அம்மையாரிடம் அனுப்பி யிருக்கலாம். சரியான விவாதங்களை — அவரை அமரவைத்தே பேச வைக்கலாம்.

ஆனல் "மாநில சுயாட்சி ஆபத்தானது"—என்ற அடுத்த வாசகம் —இவரின் அறியாமையைத் தெரிவிக்கவில்லை. இந்த நாட்டு மக்கள் —அறியாமையில் இருக்கிருர்கள் என்ற இவரின்—தவருன கணிப்பைத் தெரிவிக்கிறது.

அம்மையார் இந்த நாட்டின் வலிவு மிக்க பிரதமர் — அவரின் வாசகத்தை அப்படியே எடுத்துக் கொள்வோம்!

மாநில சுயாட்சி பற்றி புரியத்தான் இல்லை—இந்திய ஒற்றுமை என்ற பீடத்தில் — மாநிலங்களின் உரிமையை வெட்டித் தீர்க்கும் பூசாரிகளுக்கு—மாநில சுயாட்சி புரியத்தானில்லை—

மொழி தேசியங்களின்—நாடியை அறுத்துவிட்டு—இந்திய ஒற்றுமை—என்ற சவத்தை தூக்க நினைக்கும் — சுடுகாட்டு மனிதர்களுக்கு—மாநில சுயாட்சிபுரியாது.

மாநிலங்களின் குரல் வளையை நெறித்து அப்போது போடப்படும் "அய்யோ" என்ற கடைசிக் கூச்சலை இந்திய ஒற்றுமையின் தேசிய கீதமாகத் துடிக்கும் காட்டு மனிதர்களுக்கு மாநில சுயாட்சி புரிய மாட்டாதே.

மாநில சுயாட்சி ஆபத்தானது—உணர்வுகள் தடுக்கப்பட்டு-உரிமைகள் அறுக்கப்படுமானல் கட்டுப்பட்டு நடந்து கொண்டிருக்கும் மொழி—இன உணர்வுகள் வெட்டிக்கொண்டு வீரப் பண் பாடத் துவங்கிவிடும். ஆகவே மாநில சுயாட்சி ஆபத்தானதே!

மனித உரிமைகளை மையமாகக் கொண்டு சுதந்திர உரிமை தன்னிச்சையாக இயங்கக் கேட்கும் போதும் ஒரு ஜனநாயக நாடு அதை மறுக்குமானல் — இரத்த களறியோடு குழப்பம் உண்டாகும் —ஆகவே மாநில சுயாட்சி ஆபத்தானது.

மாடுகளாக — கொட்டடியில்—கட்டுண்டு கிடப்பதுதான் இந்திய ஒற்றுமை என்ருல் மாநிலசுயாட்சி ஆபத்தானதே—

"மாநில சுயாட்சி இப்போது—புரியவில்லை — ஆனல் மாநில சுயாட்சி ஆபத்தானது."

—இந்திரா காந்தி அவர்களே உங்களுடைய விவாதத்தை அப்படியே ஒத்துக்கொள்கிறேம்.

— நாவளவன் —

பிரச்சினை அலட்சியம்—செய்யப்பட்டாலே அடங்கிவிடும் என்ற அரசியல் "மாக்கியவெல்லித்தன" த்தை அம்மையார்—பிரயோகித்திருக்கிருர்கள்—

ஆனல்—சந்தை—அப்படி நமக்குச் சொல்லவில்லை.

அலட்சியம் செய்யப்பட்ட கருத்துக்கள் — தங்களை வலுவாக்கிக் கொண்டு — போர்க் களத்தில் போரிட வந்த நிகழ்ச்சிகள் பல இருக்கின்றன.

வங்கதேச உதாரணம் சிலரை பயமுறுத்துவதால்-இங்கேசொல்ல விரும்பவில்லை. சுதந்திரப்போரின் போது—நடந்த பாகிஸ்தான் பிரிவினை—சிலரை மிரட்டும் என்பதால் இங்கே வைக்கவில்லை.

இந்தியா பிறந்த போதே—பிறந்துவிட்ட கோரிக்கை "மாநில சுயாட்சி".

இந்தியாவின் கெடுதல்கள் மாற இருக்கும்—ஒரே மாற்று மருந்து "மாநில சுயாட்சி."

—இவைகள் காலத்தின் போது தீர்க்கப்படாது — "புரியவில்லை — ஆபத்து" என்ற வார்த்தைகளே பதிலாகுமானல் — இந்தியாவின் எதிர்கால ஆபத்து இன்றைய அரசியல்வாதிகளுக்குப் புரியவில்லை என்றே பொருள்.

ஏறத்தாழ சுதந்திரமடைந்து—25 ஆண்டுகளுக்குப் பிறகும்—"மாநில சுயாட்சிக் கோரிக்கை"—தனது மொத்தவலிவோடு எழுந்து நிற்கிறது.

காலம் தன் அறிவிப்பைத் தெரிவித்துவிட்டது.

அரசியல் கடைசி மனிதர்கள்—தங்கள் காலத்திலே நல்லதை செய்துவிட்டுப் போவது நல்லது—

ஏனெனில் — மாநில சுயாட்சி சிலருக்குப் புரியாதது — ஆனல் ஆபத்தானது! *

உணர்ச்சியின் ஓட்டம்

★

எழுகின்ற கதிரவன்
எழுதுகின்ற காவியத்தின்
நாயகன்
—எங்கள் கலைஞர்.
வீசுகின்ற தென்றல்
விளம்புகின்ற மணத்தின்
இனியவன்
—எங்கள் கலைஞர்.
ஒலிக்கின்ற மணியோசை
ஓதுகின்ற வேதத்தின்
புனிதன்
—எங்கள் கலைஞர்.
ஆர்க்கின்ற அலைகள்
அறிவிக்கின்ற ஓசையின்
மறையவன்
—எங்கள் கலைஞர்.
அமிழ்தன்ன தமிழ்மொழி
ஆளுகின்ற மண்ணின்
மன்னவன்
—எங்கள் கலைஞர்.

—குடந்தை சேது.

காஞ்சி மணிமொழியார் வாழ்க்கை வரலாறு

1900-ஆம் ஆண்டு மே திங்கள் ஒன்பதாம் நாள் பிறந்தவர் காஞ்சி மணிமொழியார்.

தந்தை பிரமநகர் செங்கல்வ ராயன், தாய் அரசாலை அம்மையார்.

காஞ்சி மணிமொழியார் தமது தமது கல்வி முழுவதையும் காஞ்சி பச்சையப்பன் கல்வி நிலையங்களிலேயே பெற்றார்.

அவர் ஒன்பதாவது வகுப்பில் படிக்கும்போது காஞ்சி நகரில சர். தியாகராயருக்கு. அளிக்கப்பட்ட நீதிக் கட்சி வரவேற்பால் கவரப்பட்டு — அதன் கொள்கைகளை நன்கு அறிந்து 1917-ல் பொது வாழ்வில் ஈடுபட்டார்.

அந்த நாளில் பேரும் புகழும் பெற்ற பல புலவர்களை அழைத்து தமிழ்ச் சங்கங்களின்ஆண்டுவிழாக்களில் முதியவர்களும் பாராட்டும் வண்ணம் செயலாற்றிய பெருமை மணிமொழியாருக்கு உண்டு.

பொதுவாழ்வில் ஈடுபாடு

1919 முதல் 1923 வரை குடும்பத்தின் தொழிலாக இருந்த துணிக் கடையை நடத்தி வந்த மணிமொழியார் 1922-ல்தொழில் வளர்ச்சிக்காக, பர்மா, இரங்கூன் மாந்தலை முதலிய பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்தார்.

1924-ல் அந்தத் தொழிலை நிறுத்திவிட்டஅவர் வாலாசாபாத் இந்துமத பாடசாலையில் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். 1927 முதல் காஞ்சிபுரத்திலுள்ள பச்சையப்பன் கிளைப் பள்ளியில் தமிழாசிரியராக 1930 வரையில் பணியாற்றி வந்தார்.

1919 முதல் நீதிக் கட்சியில் தீவிரமாக ஈடுபாடு காட்டி வந்த மணிமொழியாருக்குக் காஞ்சிபுரத்துப் பொது வாழ்வில் நல்ல மரியாதை இருந்தது. மணிமொழியாரின் பொதுவாழ்வு வளர்ச்சிக்கு அண்ணா அவர்கள் உறுதுணையாக இருந்தார்.

1938-39-ஆம் ஆண்டில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் திராவிட இயக்கத்தின் தலைவர்களோடும், தளபதிகளோடும் சிங்க ஏறுபோல் சீறியெழுந்து பவளக்காரத் தெருவிலிருந்த தமது இல்லத்திலிருந்து ஊர்வலம் நடத்தினார்.

சென்னையில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் அது.

1948-ல் அவினாசிலிங்கனார் கல்வி அமைச்சராக இருந்தபோது— மீண்டும் இந்திக்கு வரவேற்பளிக்கும் வகையில்அரசு நடந்துகொண்டதை எதிர்த்து 17—7—48-இல் செயிண்ட்மேரி மண்டபத்தில் மறைமலை அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பாளர் மாநாட்டுக்குச் செயலாளராக இருந்தவர் மணிமொழியார்.

அறிஞர் அண்ணா, தந்தை பெரியார், மறைமலை அடிகள், தமிழ்த் தென்றல் திரு. வி. க. புரட்சிக் கவிஞர், சிலம்புச் செல்வர், நாரண துரைக்கண்ணன், அப்துல் மஜீத், ரெவரண்ட் அருள் தங்கையா ஆகிய பல்வேறுகட்சிகளின் தலைவர்களையும் மதத் தலைவரையும் அந்த மாநாட்டில் பங்கேற்கும்படிசெய்தவர் மணிமொழியார்.

அதனால் இருமுறை மணிமொழியார் சிறைத் தண்டனை அடைந்தார்.

1937-ல் பேரறிஞர் அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்டு "நவயுகம்" என்னும் வார இதழை ஆரம்பித்து நடத்தி வந்த மணிமொழியார் 1947-ல் தமது முதல் மகனார் பேராசிரியர் மா. இளஞ்செழியனோடு இணைந்து போர்வாள் பத்திரிகையைத் தொடங்கினார்.

1950-51-ல் மத்திய அமைச்சர்களுக்குக் கருப்புக் கொடி, 1952-ல் அரசாங்கப் பெயர் பலகைகளில் இந்தி எழுத்து அழிப்பு ஆகியவற்றில் கலந்துகொண்டார்.

1949-லிருந்து 1969 வரை தி.மு.க. பொதுக்குழு உறுப்பினராகப் பணியாற்றிய மணிமொழியார் சென்னை மாவட்டத் தி. மு. க. அவைத் தலைவராக 1959-ல் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1968-ல் போட்டியின்றி ஏகமனதாக அதே பதவிக்குஅவர் நியமிக்கப்பட்டார்.

1969-ல் தி. மு. க.வின் துணைப் பொதுச் செயலாளராக பொதுச் செயலாளர் நாவலர் அவர்களால் நயமிக்கப்பட்டு கழகப் பொறுப்புக்களை தமது இறுதி மூச்சு வரையில் நிறைவேற்றி வந்தவர் மணிமொழியார். அவர் 6 முறை சிறை சென்றுள்ளார்.

*

உரிமைக் குரல் ....

★

அழுது வடியும் அவலக் குரல்கள்!
அகலம் இல்லாப் பாதைப் புலம்பல்!
கோயில் மேடையில் இடிந்த நிலைகள்!
கொஞ்சும் தமிழின் தாழ்ந்த நிலைகள்!
சாதி என்னும் சாவு மணிகள்!
சடங்கு என்னும் இழிந்த ஓசைகள்!
தனித்தக் 'குவிப்பால்' தோன்றும் இன்னல்!
தவிக்கும் ஏழையர் வாடும் கண்கள்!

படிப்பால் உயர்ந்த பண்பின் மணிகள்!
பதவி இன்றி வாடும் கனிகள்!
இந்நிலை மாறி வாழ்தல் வேண்டும்!
இழிநிலை இன்றி ஆள்தல் வேண்டும்!
அனைத்தும் நீங்க 'சுயாட்சி' வேண்டும்!
அடிமை இன்றி வாழ்தல் வேண்டும்!
சுயாட்சிக் கொள்கை வேண்டும் நாட்டில்
'சுயாட்சி'யே என்றும் வெல்லும் நாட்டில்.

—**கவிஞர். பன்னீர்செல்வன், ஆத்தூர்.**

இதயத்தில் ஓர் ஓவியம்

(காட்டுப்பாடி முத்துப் பிரியன்)

எதிரில் தெரிந்த மாடிவீட்டை ஒருமுறை உற்றுப் பார்த்து விட்டு பின்பக்கமாகத் திரும்பிய கீதாவுக்கு — எத்தனையோ வீடுகளைக் கடந்து தெருவின் மறுமுனையில்தான் நின்றுக்கொண்டிருப்பது தெரிந்தது.

மணியைப் பார்த்தபோது ஆறு ஆக இன்னும் சில நிமிடங்களிருந்தன.

என்றுமே வராத—யாருமே அறிமுகமில்லாத அந்தத் தெருவில் 'யாரையோ' எதிர்பார்த்து நின்றுக்கொண்டிருப்பது அவளுக்கு ஏதோவொரு மாதிரியாக இருந்தாலும், நெஞ்சின் மூலைகளிலெல்லாம் சிதறி நின்ற 'அழுத்தம்' ஒன்றுகத் திரண்டு அவளைக் கொக்கியாக இழுத்துவந்து அங்கே நிற்க வைத்திருந்தது.

"கல்யாணி, இத்தனை நாளும் நீ சொல்லிவந்த வார்த்தைகளோட அர்த்தத்தை இப்பதாண்டி நான் காணப்போகிறேன்......" என்று முனகிக்கொண்டாள் அவள்.

இந்த ஒரு மாத காலமாக கல்யாணியின் வார்த்தைகளைக் கேட்டு கேட்டு சலித்துப் போய்விட்டது கீதாவுக்கு. கல்லெறியப்பட்ட குளமாக, தன் மனம் ஆகி தனக்குள்ளே ஒரு புதிய நிலை உருவாகி விட்டதை நன்கு உணர்ந்துக் கொண்டாள்.

தன்னைக் காணும்போதெல்லாம் 'கீதா போன வாரம் அதே சனிக்கிழமை யன்னிக்கி அவர்களைப் பார்த்தேண்டி' என்றுக் கல்யாணி சொல்லும்போது, வேண்டுமென்றே தன் வேதனையை இவள் கிளறுகிருளோ என்றுகூட எண்ணினுள் கீதா. ஆனல் அந்த எண்ணத்திற்கெல்லாம் தடைக்கல்லாக அவர்களுடையப் பழக்கம் வளர்ந்திருந்தது.

கல்லூரி நாட்களிலிருந்தே கூடப் பிறந்த சகோதரி மாதிரி தன்னுேடு இணைந்து—ஒரே ஆபீஸில் வேலை செய்யும் கல்யாணி, தான் சிரித்த போது சிரித்து — வேதனைப்பட்ட போது வேதனைப்பட்டவள் என்பது கீதாவுக்குத் தெரியும்.

எந்தவொரு விஷயத்தையும் தான் எப்படி மறைக்காமல் அவளிடம் சொல்லிவந்தாளோ அதே போலத்தான் கல்யாணியும் கீதாவிடம் நடந்துக்கொண்டிருக்கிருள்.

தன் வாழ்க்கைத் தோட்டத்திலே அரும்புவிட்டு — இதமான நினைவுகளுக்கெல்லாம் அடிப்படை அமைத்துத் தந்த — 'காதல் விஷயத்'தைப் பற்றி ஒருநாள் கீதா சொன்னபோது அப்ப்டியே பூரித்துப்போனுள் அவள்.

"போக்கிரி ...: என்கிட்டே இத்தனை நாளும் சொல்லாம இப்படி மறைச்சிருக்கியே? காதல்னு அவ்வளவு உசத்தியா உனக்கு..." என்றுச் செல்லமாக கீதாவின் காதைத் திருகினுள்.

"உன்கிட்டே சொல்லாம இருப்பேனு கல்யாணி......நேற்றுதான் அவர் கிட்டேயே பேசினேன்..."

"என்ன பேசினீங்க? உடனே இரண்டு பேர் வீட்டிலேயும் சொல்லி உங்க கல்யாணத்தை முடிச்சிடணும்னு ஆரம்பத்தையே முடிவாக்கிட்டீங்களா?..." என்று சொல்லி சிரித்தாள் கல்யாணி.

"சீ, மண்டு...முழுசையும் கேட்காம உளருதே. முதன் முதல்ல பேசினு கல்யாணத்தைப் பத்திதான் பேசுவாங்களா? சொல்றதைக் கேளுடின்னு...நீ என்ன பண்ணிக்கிட்டிருக்கேன்னுரு. .ஆபீஸ்ல வேலை செய்துக்கிட்டிருக்கேன்னேன், அவர்கூட ஏதோவொரு சினிமா கம்பெனியிலே மேனேஜரா இருக்காராம். எல்லாவற்றையும் நேற்றுதாண்டி தெரிஞ்சுக் கிட்டேன்..."

சிறுகதை!

"ம்...அப்புறம் உன்னைப் கற்றி என்னக் கேட்டாரு?:..." — மிகவும் ஆவலாகக் கேட்டாள் கல்யாணி.

"என்னை ரொம்பவும் பிடிச்சிருக்காம், அப்புறமா 'உன்னை எனக்குத் தர உங்க வீட்டிலே சம்மதிப்பாங்களா!ன்னுரு. எதுக்கும் முறைன்னு ஒண்ணு இருக்கேன்னேன்..." என்றவள் கொஞ்ச நேரம் அமைதியாக நின்றிருந்தாள்.

திடீரென்று கல்யாணி தன்னுடையக் காதில் ஏதோ கிசுகிசுக்கவே, இருவரும் கலகலவென்று சிரிக்க ஆரம்பித்தார்கள். அந்தச் சிரிப்பு ஒருவாரம் வரை அவர்களிடையே எதிரொலித்துக் கொண்டிருந்தது.

இப்படி தன்னுடன் உயிருக்கு உயிராக இருக்கும் கல்யாணி கண்டிப்பாக தன் நினைவுகளுக்கெல்லாம் எதிரான வார்த்தைகளைச் சொல்லி வேதனையை உருவாக்க ஆசைப்படமாட்டாள் என்று கீதா எண்ணினுள். இருந்தாலும் நேற்று கல்யாணி சொன்ன செய்தியைக் கேட்டதும்—கீதாவுக்கு, இத்தனை நாளும் அவள் சொன்ன அத்தனை விஷயங்களையும் அப்படியே நம்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

வாழ்க்கையில் இனி தான் சந்திக்க நேரும் ஒவ்வொரு பொழுதும் எத்தனை துன்பத்தைப் படிய வைக்கப் போகிறது என்பதை எண்ணும்போது அவளுடையக் கண்கள் நீரைச் சிந்த ஆரம்பித்தன.

"கீதா, இதுக்காகவா அழறே' இந்தக் காலத்து வாழ்க்கையிலே இது ரொம்ப சகஜண்டி. உண்மை உண்மையாவே கடைசிவரைக்கும் நிமிர்ந்து நின்னுலும் கடைசியிலே அதுக்கு பரிசு என்ன தெரியுமா? வெறும் கண்ணீர்தாண்டி. இப்பல்லாம் இப்படிப்பட்ட பாடந்தான் காலம் நமக்குக் கற்றுக் கொடுக்குது. முதல்ல நான்கூட இதை நம்பலேடி. ஆனு எங்கப்பா நேற்றுக் காலையிலே 'நம்ம வீட்டுப் பக்கத்திலே குடியிருந்தானே சோமுன்னு ஒரு பையன், அவன் யாரோ ஒரு பெண்ணுேட ஒவ்வொரு சனிக்கிழமையும் சாயந்திரமா நம்ம ஓட்டல்ல சாப்பிட்டிட்டு எதிரில் இருக்கிற 'ஆனந்த விலாஸ்' லாட்ஜுக்குப்போருன்...கரெக்டா ஒவ்வொரு சனிக்கிழமையும் அவங்களைப் பார்க்கிறேன்' அப்படின்னு எங்கம்மாகிட்டே சொல்லிக்

கொண்டிருந்ததைக் கேட்டதுந் தாண்டி நானும் நம்பினேன். இதுக்கெல்லாம் வருத்தப்பட்டா இனிமே எந்தவிதப் பயனும் இல்லே கீதா...'' என்று கல்யாணி சொன்னபோது கீதாவால் எதுவுமே சொல்ல முடியவில்லை.

அவளது இதய ஆழத்திலிருந்து விம்மி வெடித்த குமுறலின் சாயல்கள் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்தன.

ஆசை வார்த்தைகளில் நனைய விட்டு அழகு பார்த்த காட்சிகளுக்கெல்லாம் இனியொரு முட்டுக்கட்டை. மெல்ல நடந்து வெள்ளி முகப் பொன்னுதட்டில் கொல்லும் முறுவல் குமிழியிடக் கைகோர்த்துப் போனதெல்லாம் நாளையப்பொழுதில் அவளுக்கில்லை.

“கீதா மறந்துட்டேண்டி. நாளைக்கு உனக்குப் பிறந்த நாளுன்னு சொன்னே இல்லே. கண்டிப்பா நாளைக்கு உங்க வீட்டுக்கு வர்றேன். இரண்டு பேருமா சேர்ந்து கோயிலுக்குப் போவோம்......'' என்று கல்யாணி சொன்னபோது, ‘நாளைக்கு சனிக்கிழமையில்லே...? என்று மெல்லக் கேட்டாள் கீதா.

முற்றுப் பெறாத அந்தக் கேள்விக்குள் தொக்கி நிற்கும் அர்த்தங்கள் கல்யாணிக்கு நன்கு புரிந்தன.

“அப்படின்னா நாளைக்கி நீயே அவர்களைப் பார்க்கப் போறியா கீதா?...''

“ஆமாண்டி. நானே ஒருமுறை பார்த்தாதான் எனக்கு உறுதிப்படும். எதுக்கு இத்தனைக்குப் பிற்பாடு இப்படி சொல்றேன்னா... அணைந்துப்போன விளக்கைக்கூட திரும்பவும் ஏற்றிடலாம்; ஆனா இறந்துபோன நம்பிக்கைக்கு உயிரூட்ட முடியுமா கல்யாணி?...அப்படிப்பட்டதொரு நிலையை எனக்கு நானே உருவாக்கிக்கொள்ள என்னால முடியலடி...'' என்று கேவிக்கொண்டே கீதா சொன்னபோது கல்யாணிக்கும் மனம் கலங்கியது.

லேசாக இருள் எங்கும் கவ்விக் கொள்ள ஆரம்பித்தது. நின்ற இடத்தில் அப்படியே இருந்தவள் தெருவெல்லாம் விளக்குகள் எரிந்துக்கொண்டிருப்பதைக் கண்ட போதுதான் வந்து வெகுநேரமாகி விட்டதை அறிந்துக்கொண்டாள் கீதா.

வெள்ளிக் காசுகளை அள்ளிக் கொட்டியதுபோல ‘கலகல’வென்ற சிரிப்புக்கிடையே வீட்டு முகப்பிலிருந்த மாடிக்குச் செல்லும் அறைக் கதவு ‘டக்’கென்று திறக்கப்படும் ஒலி கேட்கவே தலை நிமிர்ந்தாள்.

அவளால் நம்பவே முடியவில்லை. இதயத்தின் அடிவாரத்தில் விம்மி வெடித்த சந்தேகக் குறிகளெல்லாம் ஒன்றாகி அவளுக்கு மயக்கத்தை உருவாக்கி வைத்தன. கண்முன்னே காணுகின்ற அந்தக் காட்சிக்கும் கல்யாணியின் வார்த்தைகளுக்கும் இருக்கும் முழு ஒற்றுமையை அவளால் இனங் கண்டுக் கொள்ள முடிந்தது.

யாரோ ஒரு பெண்ணோடு, தன் உயிரோடு உயிராக இணைந்திருந்த சோமு—அப்படியிருந்ததாக தான் நினைத்துக் கொண்டிருந்தவன்— இன்று சிரித்துப் பேசிக்கொண்டு

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்-நெசவோ நெஞ்சையள்ளும்

★ ஜுர்தாக்கள்
★ பெல்ட் பாட்டம்கள்
★ லுங்கிகள்
★ சேலைகள்
★ உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள்...
கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை! ஆதாயமான உழைப்பு!

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.
(பாலசுந்தரம் பில்டிங்ஸ்)
எழும்பூர் :: சென்னை - 8.

இந்த நேரத்தில் நின்றுக்கொண்டிருப்பதைக் காணும்போது அவளுக்கு வேதனையாக மட்டுமல்ல வெறுப்பாகவும் இருந்தது.

அங்கே நிற்பதே கேவலமென்று நினைத்தவள் போவதற்காக திரும்பியபொழுது, அவர்களிருவரும் மாடிப் படி ஏறி போய்க் கொண்டிருப்பதைப் பார்த்தாள். வெகு நாட்களாகப் பழகிய தோரணை அவர்களிடையேக் காணப்பட்டது.

தனக்குத் தெரியாமலேயே இப்படிப்பட்டதொரு நிலையை அவன் உருவாக்கி — வளர்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை நினைக்கையிலேயே கீதாவுக்கு நெஞ்சு விம்மியது.

நேராக அவர்கள் முன்சென்று, தான் எப்படிப்பட்டதொரு துரோகத்தைத் தழுவிக் கொண்டவள் என்பதை அப்படியே விரித்துக் காட்டவேண்டுமென்ற வேகம் அவளுக்குள்ளே உருவாகிக்கொண்டிருக்கையிலேயே, சோமுவும் அந்தப் பெண்ணும் அறைக்குள் நுழைந்து விட்டிருந்தார்கள்.

அறைக் கதவு லேசாக சாத்தப்பட்டிருந்தது.

சிறிதுநேரம் எதையோ சிந்தித்துக்கொண்டிருந்த கீதா சுற்றுமுற்றும் ஒருமுறை பார்த்துவிட்டு மாடிக்குப் போக அடிவைத்தாள்.

"உஷா, இனிமேலும் முயற்சி செய்யறது அந்த அளவுக்கு உபயோகமில்லேன்னுதான் நினைக்கிறேன்..."—அறையின் உட்பக்கத்திலிருந்து சோமுவின் குரல் மெல்லியதாக ஒலித்தாலும் கதவோரத்தில் நின்றுக்கொண்டிருந்த கீதாவுக்கு தெளிவாகக் கேட்டது.

கூடவே அந்தப் பெண்ணும் பேசினாள்.

"அப்படி சொல்லக் கூடாது சோமு. இனிமே செய்யற முயற்சியிலேதான் நமக்கு முழுவெற்றியே கிடைக்கப் போகுது. உங்களோட உதவி இல்லேன்னு இந்த அளவுக்காவது ஒரு உண்மையை என்னால் கண்டுபிடிச்சிருக்க முடியுமா?... இதுக்காக நான் மட்டுமில்லே எங்கக் குடும்பமே உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கு..." என்று உஷா என்றப் பெயரையுடைய அந்தப் பெண் பேசியபோது வருத்தம் தோய்ந்த பேச்சாக அது இருந்தது.

சந்தேகக் குறியால் ரணமாகிக் கிடக்கும் கீதாவின் மனதுக்கு, அந்தப் பேச்சில் எந்தவித புது அர்த்தத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை. இதுவரை சிரித்துப் பேசிக்கொண்டு வந்த அந்தப் பெண்—வாழ்க்கையில் எதையோ இழந்து, மீண்டும் அதைத் திரும்பப் பெறுகின்ற பாவனையில் — சோகத்தின் வடிவாகப் போய் விட்டதைப் பார்க்கும்போது கீதாவுக்கும் ஏதோவொரு மாதிரியாக இருந்தது.

"சோமு, யாரோ சில பேர் சொன்னதை வச்சிக்கிட்டுதான் ஒவ்வொரு சனிக்கிழமையும் உங்களை அந்த லாட்ஜுக்கு அழைச்சிக்கிட்டுப் போறேன் ... இது உங்களுக்கு ஒரு சிரமமா தெரியக் கூடாது..."

'நோ ... நோ ...... அதெல்லாம் ஒண்ணுமில்லே உஷா. எனக்கு இருப்பதெல்லாம் இத்தனை நாளா போயும் அவனைக் கண்டுபிடிக்க முடியலியேன்னுதான். உஷா, உன்னோட தம்பி அந்த லாட்ஜுக்குத்தான் வந்து தங்குறுங்கிறதை உங்க வீட்டில் யாராவது பார்த்திருக்காங்களா?"

"இல்லே சோமு. வீட்டில் சண்டை போட்டுக்கிட்டு போயிட்ட இந்த ஒரு வருஷத்துக்குப் பிந்தி அவன் வீட்டுக்கு வரவே இல்லே. ஆனா சில ஆட்களோட சேர்ந்துக்கிட்டு ஏதோ தப்பான வழியிலே பணம் சம்பாதிக்கிற தொழில்ல ஈடுபட்டிருக்கிறதா கேள்விப்பட்டதும் அப்பா கூட அவனைத் தேடுற முயற்சியை விட்டுட்டார்..."

"நீ எதுக்கும் கவலைப்படாதே உஷா. உன்னுடையத் தம்பியைக் கண்டு பிடித்துக் கொடுக்கறது என் பொறுப்பு. இதுக்காக என்னோட முழு ஒத்துழைப்பையும் நீ எதிர்பார்க்கலாம். கூடப் பிறந்த சகோதரனிடம் கேட்கிற மாதிரி என்னிடம் உதவியை நீ எப்பவுமே கேட்கணும் உஷா. ஒவ்வொரு சனிக்கிழமையும் அந்த லாட்ஜில் வந்து தங்கிற விஷயம் உங்க வீட்டாருக்கெல்லாம் தெரிஞ்சு போச்சுங்கறதை அவன் கேள்விப்பட்டிருக்கலாம். அதனால் சனிக்கிழமை வராம வேறே நாளில் வரலாம். அப்படி இல்லேன்னு வேறு எங்கேயாவது போய் தங்கலாம். எதுக்கும் இன்னும் ஒரு மாதத்திலே கண்டுபிடிக்கலாம். நீ வருத்தப் படாதே உஷா..."

கொஞ்சநேரம் இருவருமே அமைதியாக இருந்தார்கள்.

ஒட்டும் ஒட்டாமல் பட்டும் படாமல் வளர்ந்துக்கொண்டிருந்த அவர்களுடையப் பேச்சு-இத்தனை நாட்களாக இருந்த அந்தப் பழக்கம்—ஆகியவற்றின் முழு விளக்கத்தையும் கேட்ட பிறகு சலனமாகிக் கிடந்த தன் மனதுக்கு முழு சாந்தி கிடைத்துவிட்டதைப் போன்றிருந்தது கீதாவுக்கு.

"என்ன, அதற்குள்ளாற எழுந்து விட்டீர்கள்?..."

'உஷா உன்கிட்டே முன்னமே சொல்லியிருக்கேன் இல்லியா, கீதான்னு ஒருத்தி, அவளோட பிறந்த நாள் இன்னிக்குத்தான். ஒரு மாதத்துக்கு முன்னமே சொல்லியிருந்தா இந்த ஒரு மாதமா அவளை நான் பார்க்கவேயில்லே. இன்று கண்டிப்பா போயாகணும். நான் புறப்படுகிறேன்..."

"என்னமோ எனக்காக உங்களோட தனிப்பட்ட அலுவல்களையெல்லாம் தள்ளி வச்சியிருக்கீங்க. பாவம் இரண்டு பேரும் என்னென்ன பேசி கற்பனையிலே மிதந்திருப்பீங்களோ?..." என்று சொல்லிவிட்டு கலகலவென்று சிரித்தாள் உஷா.

பருவத்தின் பூரிப்பில் நிற்கும் ஒரு ஆணையும் ஒரு பெண்ணையும் காதலர்களாக நினைத்துப் பார்ப்பதிலேயே தன் முழு பலத்தையும் காட்டுகின்ற இந்த உலகம், அங்கே சகோதர உணர்ச்சியை உருவாக்கி அழகு பார்க்கும் சக்தியை இழந்து விடுகிறது.

அப்படிப்பட்டதொரு பலவீனத்தை தானும் ஆட்கொண்டு, வெறும் மன சஞ்சலத்தில் உழன்றதை எண்ணும்போது மிகவும் வெட்கமாக இருந்தது கீதாவுக்கு.

ஒரு பெண் ஒரு ஆணை தன் இதயத்தில் காதலனாக ஓவியம் தீட்டும் அதே நேரத்தில், வேறொருத்தி அவனைச் சகோதரனாகவும் தீட்ட முடியும் என்பதை தெரிந்துக் கொண்டதும் கீதாவின் மனதில் முழுநிறைவு ஏற்பட்டது.

அறையில் சிரித்துக்கொண்டிருக்கும் அந்தப் 'பாசம்' மேலும் வளரட்டும் என்ற நினைப்பில் அவளுடையக் கால்கள் படியில் இறங்கிக் கொண்டிருந்தன. அதில் தனிப்பட்டதொரு வேகமிருந்தது. கல்யாணியிடம் போய் இதுபற்றி சொல்ல வேண்டும் என்பது மட்டுமல்ல—சோமுவை அங்கிருந்துக் கொண்டுதான் வரவேற்க வேண்டுமென்ற வேகமும் அதில் தொக்கிக் கிடந்தது.

★

கலைஞர் பிறந்தநாள் விழாவில் பேராசிரியர்:

விழிநோயாளர் வேதனையை உணர்ந்ததால்தான்

ஒளிவழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்!

சமுதாய மறுமலர்ச்சியில் தனது முத்திரையைப் பொறித்தவர் கலைஞர்!

"விழி நோயாளர்களின் வேதனையை உணர்ந்ததால் தான் அவர்களுக்குக் கண்ணொளி வழங்கும் கடமையில் கலைஞர் ஈடுபட்டிருக்கிறார்" என்று அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் குறிப்பிட்டார்.

பல்கலைக் கழக நூற்றாண்டுவிழாவில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் பேசியதாவது:

எல்லாருக்கும் பிறந்த நாள் வருகிறது. ஆனால் அவர்கள் பிறந்த நாள் மற்றவர்கட்குப் பயன்பட்ட செய்தியை அவர்கள் அறிந்தது கிடையாது. ஆனால் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிற காரணத்தால் பல்வேறு கடமைகளை நிறைவேற்றுகிற நல் வாய்ப்பை அவரது திறமையிலேயும் உறுதியிலேயும் இன்றையத் தினம் பெற்றிருக்கிறார்கள்.

அவர் முதல்வராகவோ அல்லது அமைச்சராகவோ ஆகவில்லையென சொன்னாலும் அவர் பிறந்த நாள் நாமெல்லாம் கொண்டாடுகின்ற நன்னாளாகத்தான் தமிழ் மக்களுடைய நன்றியறிதலுள்ள அனைவரது போற்றுதலுக்குரிய நாளாகத்தான் இருக்கும்.

தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளை பல ஆண்டுகள் கொண்டாடி யிருக்கிறோம். ஆதலால் இந்தச் சமுதாயத்தில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டதற்காக-இந்த சமுதாயத்தின் உள்ளத்தைத் தொடுகின்ற ஒரு தனிச் சிறப்புடைய கடமையை அவர் நிறைவேற்றினார் என்பதற்காகத்தான் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளை இன்றைக்கும் நாம் எண்ணுகிறோம்! போற்றுகிறோம்.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. பிறந்த நாளை நாம் கொண்டாடுகிறோம். நமது ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களது பிறந்த நாள் இந்தச் சமுதாயத்தின் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. அதேபோல கலைஞர் அவர்களும் இந்தச் சமுதாயத்தினுடைய மறுமலர்ச்சியில் தனி முத்திரையை பதித்துக் கொண்டவர் என்ற அடிப்படையில் இவர் பிறந்த நாளை நாம் கொண்டாடுகிறோம்.

தனி முத்திரை!

உண்மையாகவே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர் முதலமைச்சராக இல்லையென்று சொன்னாலும் பல்வேறு சாதனைகளைத் திறம்பட நிறைவேற்றுகிற ஆற்றல் பெற்றவராகத்தான் என்றைக்கும் திகழ்ந்திருக்கிறார். திரைப்பட வசனத்தை எழுதி முடிக்கின்ற கடமையாக இருந்தாலும் ஒரு படத்தை முடித்து மக்களது கண்ணுக்கு முன்னாலே அதை திரையிடுகின்ற செயலாக இருந்தாலும் ஒரு இயக்கத்தினுடைய போராட்டத்தை நடத்திச்செல்லுகின்ற காரியமாக இருந்தாலும்—அரசியல் கூட்டத்தில் வீற்றிருந்து அந்த மக்களுடைய உள்ளத்தில் எழுச்சியூட்டுகின்ற ஒரு கடமையாக இருந்தாலும் ஒரு நாடகத்தைத்தான் நடத்த நேரிட்டாலும் எதைக் செய்தாலும் அதில் தன் முத்திரையைப் பொறிக்கக் கலைஞர் தவறியதில்லை.

கலைஞர் முதன் முதல் சுயமரியாதை இயக்கத்தில் பிரச்சாரம் செய்கின்ற இளைஞனாகப் புறப்பட்ட நிலையிலிருந்து இன்றைக்குத் தந்தை பெரியாருக்கு முன்னாலேயே ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று பேரறிஞர் அண்ணா சொன்ன கருத்தை எடுத்துச் சொல்லி அதிலே பரவசம் அடைகின்ற அளவுக்கு இந்த நாற்பதாண்டுக் காலம் அவரிடத்திலே ஏற்பட்ட வளர்ச்சியும், மாற்றமும் தமிழகத்தில் ஏற்பட்ட மாற்றம், வளர்ச்சி ஆகியவற்றின் முழு அடையாளங்களாகும்.

பெரியாரைப் பின்பற்றி கடவுள் எங்கே என்று கேள்வி கேட்கிற போது அதிலே ஒரு தனி மகிழ்ச்சி பிறரைச் சிந்திக்க வைக்கிறோமே என்று. கடைசியில் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்று சொல்லுகிறபோது எல்லோருடனும் சேர்ந்து நாமும் அந்தக் கருத்தையே ஏற்றுக் கொள்கிறோம்—எல்லோருக்கும் ஏற்ற பொதுக் கருத்துக்கு நாம் உடன்படுகிறோம் என்ற நிறைவு நமக்கு ஏற்படுகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பெரியார் சொன்ன சிந்திக்கும்

காஞ்சி
(கிழமை இதழ்)
ஆண்டுசந்தா ரூ. 13. ஆறுமாதம் ரூ. 6-50
மலர் 8 | 18—6—72 | இதழ் 50

கருத்தை ஒரு காலத்தில் சொன்னவர்தான். சிந்திக்கவே சொல்லிக் கொண்டிருந்தால் செயல் செய்யவே மாட்டான். ஆகவே செயல் செய்கின்ற கட்டத்திற்குவரவேண்டும் என்றகாரணத்தால் ஒருமித்த கருத்தை உருவாக்க அறிஞர் அண்ணா அவர்கள் முற்பட்டார்கள்.

நிதி சேர்ப்பது — கருணாநிதியால்தான் முடியும்!

இன்றைக்குக்கூட நமது கலைஞர் அவர்கள் செயல் செய்ய வேண்டும் என்று உந்தப்பட்ட உணர்ச்சிக்கு மிகப் பெரிய அளவு ஆளானவர்கள்.

அதே இலட்சியத்தில் கடந்த ஆண்டு தனது பிறந்த நாள் வெறும் மலர் மாலை அலங்கார நாளாக மாறிவிடக் கூடாது என்றெண்ணி மாலை போடுகிற நண்பர்கள் எல்லாம் நன்கொடை தரவேண்டும் என்று கேட்கத் தொடங்கி அது சிறு தொகையாகத் தொடங்கி அவரது ஆற்றல் காரணமாக அது பெருந் தொகையாகச் சேர்ந்து ஒரு கோடியே 6 லட்சம் ரூபாய் சேர்க்கிற அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

இதற்கிடையில் நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு 6 கோடி சேர்ந்திருக்கிறது. எனவே இப்படி இரண்டு நிதி சேர்ப்பது கருணாநிதியாலேதான் முடியும். இந்த ஆற்றல் சாதாரணமானதல்ல. இதற்கிடையில் சென்ற ஆண்டு பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி!

மூன்று காரணத்தாலேயே இந்தப் பிரச்சினையை யாரும் விரும்ப மாட்டார்கள். ஒன்று பிச்சைக்காரர்களுக்கு அரசாங்கத்திலே செல்வாக்குக் கிடையாது. ஒரு வேளை அரசியல் பிச்சைக்காரர்களுக்கு இருக்குமே தவிர பிச்சைக்காரர்களுக்குச் செல்வாக்கு கிடையாது. அந்தப் பிச்சைக்காரர்களை எண்ணிப் பார்க்கிற நெருக்கடி எங்களுக்கும் ஏற்பட்டதில்லை. ஒரே ஒரு காரணம் அவர்களிடத்தில் ஓட்டை நாங்கள் எதிர்பார்ப்பதில்லை. ஆனால் கலைஞர் கருணாநிதி அவர்கள் இவர்கள் ஓட்டுரிமை உடையவர்கள் இவர்கள் ஓட்டுரிமை இல்லாதவர்கள் என்று எடைபோடாமல் மனிதாபிமானம் உடைய காரணத்தால் நம்முடைய அரசாங்கம் பிச்சைககாரர்கட்கு மறுவாழ்வு காண முயற்சிக்காவிட்டால் வேறு யார் செய்யப்

நமது சரக்கு

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற உன்னதக் கொள்கைக்கும் நாமே உரியவர்கள், ஆண்டவன் பத்து அவதாரங்கள் எடுத்தான் என்பதற்கும் பாடல் எழுதுகிறவர்கள் நாம், சாதிகள் இருக்கும் என்ற கொள்கைக்கும் உடன்பட்டவர்கள் நாம், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற கொள்கைக்கும் நாம் வாரிசு — என்று நீண்ட நாளைக்கு பலசரக்கு வியாபாரம் நடத்த முடியாது! ஒரு சரக்கைத்தான் ஒழுங்காக விற்கவேண்டும். அந்த சரக்கும் நாணயமானதாக இருக்க வேண்டும், மக்கள் வாங்கக்கூடிய சரக்காகவும் இருக்க வேண்டும், பயன் பெறுகிற சரக்காகவும் இருக்க வேண்டும், உலகம் ஒப்புக்கொள்கிற சரக்காகவும் இருக்க வேண்டும்.

—அறிஞர் அண்ணா.

போகிறார்கள்? இந்த பிரச்சினைக்கு நாமே தீர்வு காணவிட்டால் அல்லது நாமே முயற்சிக்காதுவிட்டால் வேறு யார் முயற்சிப்பார்கள்? என்றைக்கு அடிகோல முடியும் என்று எண்ணிய காரணத்தால் தான் துணிந்து அவர் சொன்னார்.

அந்தப் பிரச்சினையைத் தீர்க்க இன்னும் பத்தாண்டுக்காலமாகும். ஏறத்தாழ தமிழ் நாட்டிலே தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மட்டும்அறுபதாயிரத்திலேயிருந்து எண்பதாயிரம் வரை இருக்கிறார்கள். நாங்கள் எவ்வளவு பாடுபட்டுச் சேர்த்தாலும் நாங்கள் இருபதாயிரம் பேரை வாழ வைப்பதற்கேகூட இரண்டாண்டு காலமாகும். இப்பொழுதே ஏறத்தாழ 50 லட்சம் ரூபாய்க்குமேல் செலவிட்டு ஆறு இடங்களில் அவர்களுக்கான மறுவாழ்வு நிலையங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

ஒரு பக்கம் பிச்சைக்காரர்கள்— இன்னொரு பக்கம் தொழு நோயாளர்கள். இந்த நாட்டிலே தமிழ் நாட்டில் மட்டும் தொழு நோய் அடையாளம் உள்ளவர்களும் தொழு நோயாலே பாதிக்கப்பட்டவர்களும் ஏறத்தாழ 20 லட்சம் பேர் இருக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதில் 10 லட்சம் பேருக்கு அவர்கள் வீடுகளிலேயே சிகிச்சை வழங்கினால் போதும். ஏறத்தாழ 2 லட்சம் பேர் பல்வேறு மருத்துவமனை மூலமாக இன்றைக்குக் கவனிக்கப்படுகிறார்கள்.

வெளிநாட்டுப் பாதிரிமார்கள் அந்தப் பெரும் கடமையில் பெரும் பகுதியை மருத்துவமனை மூலமாக இன்றைக்கு நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

வேறு பல நிறுவனத்தாரும் இந்த வகையில் உதவிசெய்து வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் நாங்கள் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். அதே நேரத்தில் பிச்சை எடுக்கின்ற நிலையிலே வாழ்கின்ற மக்கள் எந்த மருத்துவ மனைக்கும் செல்ல விரும்புவதில்லை. இந்தத் தொழிலிலே அவர்கள் ஒரு லாபம் இருப்பதாகக்கருதுகிறார்கள். அந்த லாபம் சமுதாயத்திற்குப் பெரிய நட்டம். ஆகவே, சமுதாயத்திற்கு ஏற்படுகின்ற மொத்த இழப்பை ஏதோ லாபம் என்கின்ற தவறான மனப்பான்மை இந்த இரண்டையும் மாற்றுவதற்கு அவர்களுக்கு கொஞ்சம் வாழ்க்கை வசதியோடு கூடிய நிம்மதியாக மருத்துவம் செய்து கொள்ளக்கூடிய நிலைமை கொஞ்சம் கட்டாயப்படுத்தியாவது இருக்க வைப்பதற்கு இந்த ஏற்பாட்டை கடந்த ஆண்டே மேற் கொண்டார்கள். அது தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

அதேபோல இந்த ஆண்டு கண் சிகிச்சைபற்றி அவர்கள் எண்ணிப் பார்ப்பதற்கு பல்வேறு காரணங்கள்—ஒன்று கண் நோய் வாய்ப்பட்டவனுடைய துன்பத்தின் எல்லை அவருக்குத் தெரியும். இரண்டாவது வசதியுள்ள காரணத்தால் இந்தத் துன்பத்திலே இருந்து நாமெல்லாம் மீளுகிறோம். வசதியற்றவர்கள் எவ்வளவு கொடுமைக்கு ஆளாவார்கள் என்பதும் அவருக்குத் தெரியும்.

மூன்றாவது இந்த நாட்டிலே எத்தனை லட்சம் பேர் கண்கள் தெரியாதவர்கள் வாழுகின்றார்கள் என்பதை எண்ணுகின்றபோது 6 லட்சம் பேரிலிருந்து 10 லட்சம் பேர் வரையில் கண் பாதிக்கபபட்ட மக்கள் 40 வயதிற்குமேல். ஒருகாலத்தில் 55 வயதிற்குமேல் பாதிக்கப்பட்டார்கள். அண்மைக் காலத்தில் 50 வயதுக்குமேல் பாதிக்கப்பட ஆரம்பித்தார்கள். இப்போது உள்ள நிலையில் 40 வயதிற்கு மேல் பாதிக்கப்பட ஆரம்பிக்கிறார்கள். அவர்களது பிற்கால வாழ்வில் ஒரு பதினைந்து இருபதாண்டுக் காலம் சமுதாயத்திற்குப் பயன்படாமல் பிறருக்குச் சுமையாகி நோயாளியாக வாழ்க்கை நலன்களை இழந்து துக்ககரமான சூழ்நிலைக்கு ஆளா

வதை எண்ணியதாலேதான் அவர்களுக்கு மறுவாழ்வளிக்கின்ற திட்டத்தைப்பற்றி கலைஞர் எண்ணினார்கள்.

டாக்டர் வெங்கடசாமி அவர்கள் தொடர்ந்து இத்துறையிலே தீவிரமாகப் பணியாற்றி வருகிறார்கள்.

தமிழ் நாட்டிலே 50 இடங்களிலாவது கண் மருத்துவ மனை ஏற்படுத்துவதற்கான முயற்சியிலே நான் ஈடுபட விரும்புகிறேன். அரசின் ஒத்துழைப்பு வேண்டும். தனிப்பட்டவர்களின் நன்கொடையிலே நாங்கள் மருத்துவ மனை கட்டி முடித்து விடுகிறோம். அந்த ஒவ்வொரு மருத்துவ மனையிலும் தினம் பத்துப் பேருக்கு அறுவைச் சிகிச்சை நடத்தக்கூடிய வாய்ப்பு வசதிகளை உண்டாக்கலாம், அதை நடத்துகின்ற பொறுப்பை அரசு எடுத்துக்கொண்டால் தனியாரின் நன்கொடை மூலமாக அந்த மருத்துவமனைகளைக் கட்டலாம் என்று டாக்டர் வெங்கடசாமி எங்களிடம் கூறினார்.

அப்பொழுதுகூட நாங்கள் ஆலோசித்துப் பார்த்தோம். 6 - லட்சம் பேருக்கு மருத்துவமனை கட்ட ஆரம்பித்து ஓராண்டு இரண்டாண்டுக் காலம் கழித்து இந்த மருத்துவமனைகள் செயல்பட ஆரம்பித்தால் எவ்வளவு பேருக்கு கண் சிகிச்சை கிடைக்குமென்று கேட்டால் இந்த மருத்துவமனை மூலமாகக் கிடைப்பது, 50 ஆயிரம் பேருக்கு.

இதற்கிடையிலே இரண்டாண்டுக் காலம் காத்திருக்க வேண்டும். ஆகவே மருத்துவமனை வருகிறபடி வரட்டும். அது பெரு முயற்சி. தொடக்க நிலையில் இந்தக் கண்ணோயாளிகட்கு அறுவைச் சிகிச்சை வழங்குகிற திட்டம் இன்றைக்கேகூட நடைபெறுகிறது. அது குறிப்பிட்ட சிறிய அளவிலே நடைபெறுகிற திட்டம். ஆண்டுக்கு 10 முகாம் நடைபெறுகிறது. ஏறத்தாழ எட்டாயிரம் பேரிலிருந்து 10 ஆயிரம் பேர் வரை அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறார்கள்.

ஆண்டுக்கு 50 ஆயிரம் பேர் புதிதாகக் கண் குருடு ஆகும் மக்கள் நம்முடைய நாட்டிலே இருக்கிறபோது ஆறு லட்சம் பேர் ஏற்கனவே இரண்டு கண்ணும் தெரியாத மக்கள் இருக்கிற நாட்டில் ஒரு தீவிரத் திட்டம் தொடங்கி பத்தாண்டுக் காலம் தொடர்ந்துசெய்யாவிட்டால் கண் குருடர்கள் ஆகின்ற மக்களுடைய எண்ணிக்கை அதிகமாகி நம் சமுதாயத்தின் கண்ணே அவிந்து விடும் என்கிற துக்ககரமான நிலையை நாங்கள் எதிர்பார்த்து அதற்கு இடம் தரக்கூடாது என்று கருதினோம்.

கலைஞர் அவர்கள் அந்த எண்ணங்களைப் பெருமளவில்வரவேற்றதோடு நில்லாமல் எப்படியும் இந்தப் பிறந்த நாளை அதற்குப் பயன்படுத்தும் வகையில் என்னைக் கொண்டாடுபவர்கள் என் இலட்சியத்தைக் கொண்டாடட்டும் என்ற எண்ணத்தோடு ஆண்டொன்றுக்கு குறைந்தது 1 லட்சம் பேருக்காவது அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்.

இதற்குக் குறைந்தது நூறு முகாம்கள் நடத்த வேண்டும். மாவட்டத்திற்கு 8 முகாம்கள் நடத்த வேண்டும். இப்போது 40-டாக்டர்கள் டாக்டர் வெங்கடசாமி, டாக்டர் ஆபிரகாம் ஆகியோர் தலைமையில் பணியாற்றுவதற்கு சூழ்நிலை இருக்கிறது.

இதற்கு இடம் கிடைக்க வேண்டுமானால் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் ஆகிய இடங்களிலேதான் ஒரு நாளைக்கு 60 பேரிலிருந்து 80 பேருக்குக் கண் சிகிச்சை நடைபெறுமானால் 6 நாள் வரையில் 400 பேருக்கு நடைபெற்றால் அதிலே ஒவ்வொருவரும் 6 நாள் ஏழு நாள் கண் கட்டப்பட்டு அங்கேயே வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டும். உணவு வழங்கப்பட வேண்டும். அவர்களுடைய மற்ற தேவைகள் கவனிக்கப்பட்டாக வேண்டும்.

ஆக ஏழாவது நாள் அவர்கள் கண் கட்டு அவிழ்க்கப்படும் வரையில் ஆயிரம் \ பேருக்கு சிகிச்சையளிக்க வேண்டுமானால் 20 நாள் ஆகும். ஆயிரம் பேருக்கு ஒரு முகாமில் நடைபெற்றால்தான் நூறு முகாமில் லட்சம் பேருக்கு நடைபெறும்.

இதை நடத்துவதற்காகப் பல பேர் முன்வந்திருக்கிறார்கள். அவர்களை நான் வாழ்த்துகிறேன்; வரவேற்கிறேன். இதை தீவிரமாக நடத்த ஒத்துழைப்புத் தரும் அனைவரையும் பாராட்டுகிறேன்.

இதற்குத் தனிப்பட்ட பொது மக்களின் ஒத்துழைப்புத் தேவை. ஆள் ஒன்றுக்கு அறுவைச் சிகிச்சையளித்து உணவளித்து நல்ல நிலையில் திருப்பி அனுப்ப 50 ரூபாயிலிருந்து 75 ரூபாய் வரை செலவாகும்.

பாதிரியார் கலைஞர்

நான் உள்ளபடியே இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நண்பர் வீரமணி மூலமாக தந்தை பெரியார் அவர்களிடத்திலேகூட நன்கொடை கேட்க வேண்டிய கட்டத்தில் நாங்கள் இருக்கிறோம். குறைந்தது ஒரு முகாமுக்காவது கடவுளைத் தேடுவதற்குச் செலவழிப்பவர்கள் செலவழிக்கட்டும். இல்லையென்று சொலபவர்கள் இல்லையென்று சொல்லட்டும். கண்ணில்லாதவர்க்கு கண் வழங்க இருசாராரும் உதவி செய்யட்டும். பணம் தரட்டும் என்றுதான் இரண்டு பேரையும் வேண்டிக் கொள்வேன்.

உடனே வீரமணி கேட்கக்கூடும்; கடவுளிடத்திலே உங்களுக்கு நம்பிக்கை வந்துவிட்டதா என்று எனக்குக் கடவுள் நம்பிக்கை வந்ததோ இல்லையோ கடவுளை நம்புகிறவர்களை நம்பிப் பழக்கப்பட்டு விட்டேன்.

ஆகவே அப்படிப்பட்ட நிலையில் நம்பிக்கை உண்டா இல்லையா என்பதைவிட மனிதனை நம்ப வேண்டிய கட்டத்தில் மனிதனுக்குத் தன்னம்பிக்கை ஏற்படுத்த வேண்டிய கட்டத்தில் நாம் இன்று வந்து கொண்டிருக்கிறோம்.

எனவே அப்படிப்பட்ட அரிய முயற்சியில் ஒத்துழைப்புத் தரும் அனைவருக்கும் நன்கொடை வழங்கும் எல்லோருக்கும் மேலும் பணியாற்றுகிற நல்லவர்க்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் குடும்பம் நடத்தும் பாதிரியாராக இருக்கிறார். எனவே அப்படிப் பட்ட பாதிரியாரைப் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். *

அறிவு

அறிவு மனிதனுக்கு பயன்படவில்லை, மனிதன் பறக்கக்கூட கற்றுக் கொண்டான்! பார் முழுவதையும் பாக்கட் சைஸ் ரேடியோவுக்குள் அடக்கி விட்டான்! ஆனால் இன்னமும் பசி, பட்டினி பஞ்சம் இன்றி எல்லோரும் வாழ வழி கண்டு பிடிக்க மட்டும் மனிதனுடைய அறிவு அவனுக்குப் பயன்படவில்லை.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு வாங்குவீர்

நன்மையை நோக்கித் திரும்புவீர்

சைகிள் சக்கரம் சுழலவது போல் அன்வார் வாழ்க்கையிலும் ஏன் ஓர் மகிழ்ச்சிகரமான திருப்பம் ஏற்படக்கூடாது?
தமிழ்நாடு பரிசுச் சீட்டின் மூலம் அவர் ரூபாய் ஒரு லட்சம் பரிசு பெறக்கூடும்.

மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 10,50,000*

மொத்த பரிசுகள் 3198

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்
(ஒவ்வொரு வரிசைக்கும்)

குலுக்கல் நாள்: 30-6-1972

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை: ரூ. 1/- தான்

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இது வரை
287 லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது!

அறிந்து தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.
விளம்பர வெளியீடு. இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9

* 3 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
86, ... அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.